விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 02 திங்கட்கிழமை (18.10.2004) தொலைபேசி - 2223378 ஒலி 304

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் சீமெந்து

முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## அரசின் மாற்று யோசனை குறித்து நவம்பரில் பேச்சுகள் ஆரம்பமாகும்?

### நோர்வே உயர்மட்டக்குழு கொழும்பு வரும்

(நமது நிருபர்)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதம் (நவம்பர்) முதல்வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நோர்வேயின் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று அடுத்து வரும் சில தினங்களில் கொழும்பு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைக்கு மாற்றீடாக அரசாங்கம் தயாரித்துள்ள மாற்று யோசனைகளை ஆராய்வதற்கு விடுதலைப் புலிகள் தயாராகவுள்ளனர் என்ற அறிவிப்பை அடுத்தே நோர்வேயின் உயர் மட்டக் குழுவொன்று கொழும்பு வரவுள்ளது.

அரசாங்கம் தயாரித்து வைத்துள்ள மாற்று யோசனைகளை விடுதலைப் புலிகளிடம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் யோசனைகளின் அடிப்படையிலேயே பேச்சுகள்!

### சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருந்து விடுதலைப் புலிகள் இம்மியளவும் விலகவில்லையென தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு தற்போது பிரேசிலில் தங்கியுள்ள சு.ப.தமிழ்ச்செல்வன் அங்கிருந்தவாறே பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக நாம் எமது தெளிவான (12 ஆம் பக்கம் பார்க்க)



# நாடு பிளவுபடுவதைத் தடுப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம்

## பண்டாரகமுவவில் ரணில் பேச்சு

(நமது நிருபர்)

**இலங்கை பிளவுபடுவதை தடுத்து நிறுத்துவதே ஐக்கிய தேசியக் கட்சியின் குறிக்கோளாக உள்ளது. இதனையே பெரும்பான்மை மக்களும் விரும்புவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

களுத்துறை மாவட்டத்தில் பண்டாரகமுவவில் நேற்று இடம் பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் பிரமாண்டமான கூட்டமொன்றில் பேசும்போதே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில், ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆட்சிக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தமொன்றைச் செய்திருக்காவிட்டால் நாட்டின் நிலை படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும்.

ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்தவரையிலும், என்னைப் பொறுத்தவரையிலும் நாட்டைப் பிரித்துவிடவேண்டிய அவசியமில்லை.

நாடு படுமோசமான நிலையில் இருந்தபோதே யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. யுத்தம் தொடர்ந்து நடைபெற்றிருந்தால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கமுடியாமல் இருந்திருக்கும். இலங்கையின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்படவேண்டும். தெற்கில் மாத்திரமின்றி, வட-கிழக்கிலும் ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டும். மனிதஉரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத்தினரை அரசியல் குழு இன்று சந்திக்கும்

### முக்கிய விடயங்கள் ஆராயப்படும்

(பெல்ஜியம்)

ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர் மட்டக்குழுவினர் இன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்கள்.

நேற்றுமுன்தினம் பெல்ஜியத்தைச் சென்றடைந்த இவ் உயர்மட்டக் குழுவினர் நேற்று அங்கு வாழும் புலம்பெயர் தமிழர்களுடன் கலந்துரையாடினர்.

இதனையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களை இன்று சந்திக்கும் இக்குழுவினர் அவர்களுடன் முக்கியமான விடயங்கள் குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-121)

## ஜனாதிபதியின் ஆலோசகர் ஹரீம் பீரிஸ் விடுதலைப் புலிகளைச் சந்திக்கவில்லை!

(நமது நிருபர்)

ஜனாதிபதியின் ஆலோசகரும், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை கிளிநொச்சியில் சந்தித்ததாக வெளிவந்த செய்திகளை விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மறுத்துள்ளார்.

இதுதொடர்பாக சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

ஜனாதிபதியின் ஆலோசகர் ஹரீம் பீரிஸ் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்தார் என்பது தவறான விடயமாகும். அவர் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திலுள்ள முக்கியமான எவரையும் சந்தித்ததாக எமக்குத் தகவல் கிடைக்கவில்லை என்று சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற் கரும்புலிகளின் மதிநுட்பமே ராணுவ தாக்குதல்களை நிறுத்தின

### யாழ். மாவட்ட துணை அரசியல்துறை பொறுப்பாளர் செம்மணன்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசியத் தலைவரால் கட்டி வளர்க்கப்பட்ட கடற்கரும் புலிகளின் ஒவ்வொரு தாக்குதல் சம்பவங்களின் போதும் கடைப்பிடிக்கப்பட்ட தாக்குதல் வியூகங்கள் காரணமாக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்கள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.

இவ்வாறு யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

நேற்று நெல்லியடியில் நடைபெற்ற ‘அலைபாடும் பரணி’ வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களின் மேற்கொள்ளப்பட்ட போரியல் நடவடிக்கைகளினால் இராணுவத்தினர் வகுத்த உச்சக்கட்ட தாக்குதல்கள்கூட கடற்புலிகளின் பல வெற்றிகரத் தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டது. இதற்கு அவர்களின் மதிநுட்பமும், சிறந்த ஆளு (12 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோரிடம் ஒப்படைப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு ஊர்காவல்படையினரும் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் இருவரும் நேற்று அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட இரண்டு ஊர்காவல் படையினரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம)

## குளப்பிட்டிச்சந்தி விபத்தில் இரண்டு பேர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

தனியார் கம்பனி ஒன்றின் வான், சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் சைக்கிளில் வந்த இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கொக்குவில் குளப்பிட்டியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவக்கின்போசு கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த இ.தனுசன் (வயது 12), கொக்குவிலைச் சேர்ந்த இ.பிரபாகரன் (வயது 21) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட சிறுவன் கொக்குவிலில் வேலை செய்யும் தனது தந்தைக்கு சாப்பாடு கொடுப்பதற்காக தனது உறவினர் ஒருவரின் சைக்கிளில் சென்றவேளையிலேயே இச்சம் (12 அம் பக்கம் பார்க்க)

## தொண்டமான் ஜனாதிபதி சந்திப்பு

16 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதி சந்திரிகாவை இவ்வாரம் சந்திக்கவுள்ளார்.

சிறுபான்மை அரசாக இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கியதை அடுத்து அரசு பெரும்பான்மை பலத்தைப் பெற்றபின் முதன்முறை[illegible] இச்சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறி[illegible]த்தக்கது. (ம-121)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நவராத்திரிப் பாமாலை



## இலக்குமி துதி

### திருமகளே

செல்வம் தருபவள் திருமகளே
சிறப்புத் தருபவள் திருமகளே
நிறைவு தருபவள் திருமகளே
நின்மதி தருபவளும் அவள்தானே

எஸ்.தாரணி,
தரம்-8
சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்

### அருள்வாயே

செல்வம் பெருக வரவேண்டும்
தேசம் செழிக்க அருள்வேண்டும்
சொல்லி நாமம் வணங்குகின்றோம்
சோதி இலக்குமி அருள்வாயே

இ.காமராசன்
தரம் -8
யு,னியன் கல்லூரி

### எழுதுகின்றேன்

சேயுந்தன் நானம்மா!
சேவடி போற்றுகின்றேன்
நாவன்மையால் உனக்கு
நாலடி எழுதுகின்றேன்

ஜனனி பஞ்சலிங்கம்
தரம்-11
யா/வட இந்துமகளிர் கல்லூரி

### காப்பவளே

சீறி வருகின்ற சிங்கத்திலே
ஏறி வருகின்ற தாயோ நீ
வெற்றி தரும் மங்களேமே
எம்மைக் காப்பவள் நீயே

ஜெ.துஸ்யந்தி
தரம் - 10
யாழ்.தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை

# ஹெல உறுமயவின் 4எம்.பிக்கள் அரசுடன் இணைவதற்கு முடிவு?

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயக்கட்சிக்குள் எழுந்துள்ள உட்பூசலை அடுத்து அக்கட்சியைச் சேர்ந்த நான்கு [illegible]ராளுமன்ற உறுப்பினர்கள் அ[illegible]சாங்கத்திடம் இணையவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதுகுறித்து அமைச்சர்கள் சிலருககும், ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில இரகசியச் சந்திப்புக்கள் இடம் பெற்று வரு[illegible] நம்பகரமாகத் தெரியவருகிறது.

அதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கட்சியின் தலைமைப்பதவியைக் கைப்பற்ற எத்தணிப்பதாகவும்,

இதனால் கட்சிக்குள் தலைமை[illegible]வப் போட்டி தலைதூக்கியுள்ள[illegible]கவும் தெரியவருகிறது.

ஹெலஉறுமய கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உட்பூசல் குறிக்கு கட்சியின் முக்கியஸ்தர்கள் நேற்று முன்தினம் கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்தைப்பீடாதிபதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனா.

கட்சியின் உட்பூசல்களை கட்சி மட்டத்தில் சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் எனப் பீடாதிபதிகள் அறிவுரை கூறியுள்ளனர். நாட்டின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் வகையில் ஜனாதிபதி கூட்டியுள்ள சமாதானம் மறறும் இணக்கப்பாடு தொடர்பான தேசிய ஆலோசனை சபைக்கூட்டதகில் ஹெலஉறுமய கலந்துகொள்ள வேண்டும் என மல்வத்த பீடாதிபதி வலியுறுத்திக்கூறியுள்ளார்.

ஜனாதிபதி கடந்த 4ஆம் திகதி நடாத்திய தேசிய ஆலோசனைக் கூட்டத்தில் ஹெலஉறுமய கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடக்ககக. (க-121)

# இறால் வளர்ப்பு குறித்த சாத்தியப்பாடுகள் ஆராய்வு

(ஊர்காவற்றுறை)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையிலான குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறைப் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள புளியங்கூடல் குறுக்கு கடல் நன்னீர் தேக்கப் பகுதியில் இறால் வளர்ப்புத் தொடர்பான சாத்தியப்பாடுகளை இக்குழுவினர் ஆராய்ந்தனர்.

அத்துடன், கரம்பன் மேற்கு மெலிஞ்சிமுனைப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் உவர்நீர்த் தடுப்பு அணையினையும் பார்வையிட்டனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனுடன் பிரதித்திட்டமிடல் பணிப்பாளரும் நியாப் திட்டப் பணிப்பாளருமான கா.பாலகிருஸ்ணன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் ஆகியோரே அங்கு விஜயம்செய்து நிலைமைகளை ஆராய்ந்தனர். (ந-75)


## சிறுவிளம்பரம்

### 'ஆனந்தி' வெளியீடுகள் விற்பனையாகின்றன!

எண் சாத்திரம்-உங்களையும் மற்றவரையும் அறியும் சோதிட நூல், 2005ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி? அழகியல் தரம் 1-5வரை ஆங்கில்த்தில் 50கட்டுரைகள்; உங்களுக்குப் பொருத்தமான துணையைத்தேடித்தர, கைரேகை, எண் ஞானம், ஜாதக மூலம் பலாபலனறிய, விவாகப்பெருத்தம் பார்க்க, கிரக சாந்திகள்செய்ய, மனை வகுக்க, தோஷங்கள் நீங்க, ஏற்ற இயந்திரங்கள்பெற உங்கள் எதிர்காலம் பற்[illegible] சிந்திக்கும் நேரத்தில் V.A.சிவராச[illegible], No-01, பழம்றோட் கந்தர்மடத்தில் சந்திக்கலாம். (8905)


# சிறுபான்மை கட்சிகளை பாதிக்காதவாறு வெஸ்ட் மினிஸ்ரர் திட்டத்தை அறிமுகம் செய்ய ஜனாதிபதி விரும்புகின்றாராம்!

(கொழும்பு)

வெஸ்ட் மினிஸ்ரர் திட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முயற்சித்தால் சிறுபான்மைக்கட்சியினர் தங்களது பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் என்று குரல் எழுப்பி வருகின்றன.

இதனால் புதியதொரு திட்டத்தை அறிமுகம்செய்யாமல் வெஸ்ட் மினிஸ்ரர் திட்டத்தில் சில அவசிய மாற்றங்கள் செய்து, அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் அப்புதிய திட்டத்தை அறிமுகம்செய்யத் தான் விரும்புவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அதற்கு பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சபையின் பிரதிநிதிகளின் ஆலோசனையைக் கேட்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையில் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சபையின் பிரதிநிதிகளைச் சநத்தபோதே ஜனாதிபதி இவ்வாறு கேட்டுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் தறபோதைய அரசியலமைப்பு, தேர்தல் முறைமை இன விகிதாசார வாக்களிப்புடன் இயைந்த வெஸ்ட் மினிஸரர் பாராளுமன்றத் தேர்தல் முறைமை, பாராளுமன்ற அரசியலமைப்பு போன்ற பல்வேறு அரசியல்யாப்பு மற்றும் அரசியல் இராஜாஙக விடயங்கள குறித்து பலமணிநேரம் ஆராயப் பட்டதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதியின் பிரத்தியேக அழைப்பில் கொழும்பு வந்துள்ள இக்குழுவினர், தற்போதைய அரசியலமைப்பை மாற்றியமைக்க எத்தகைய உதவிகளையும், ஆலோசனைகளையும் தாங்கள் வழங்க வேண்டுமென்று ஜனாதிபதி எதிர்பார்ப்பதாக அவரிடம் கேள்வியெழுப்பியதாகவும் இரகசியத் தகவல்கள தெரிவிக்கின்றன. (க-121)

# பாதையோர வியாபாரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது

(இணுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் பிரதேசத்தில் பாதையோர வியாபாரத்திற்கு பிரதேசசபை தடைவிதித்துள்ளது.

குறிப்பாக டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சந்தைவீதி, பஸ்நிலைய வீதி, மீன் சந்தை வீதி போன்றவற்றிலும் கழிவுநீர் செல்லும் வாய்க்கால் மேல் தளத்திலும் வைத்து பொருட்களை விற்பனை செய்ய வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவினை மீறி விற்பனை செய்வோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச சபைச்செயலாளர் திருமதி சொக்கலிங்கம் அறிவித்துள்ளாா. இந்த நடைபாதை வியாபாரத்தின்மூலம் போக்குவரத்தில் இட நெருக்கடி ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. (ந-122)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்ததிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்பட்டு நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்பாக தமக்கு அனுப்பி வைக்கப்படவேண்டுமென பரீட்சை ஆணையாளர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (க)

# சமாதான நடவடிக்ழகைகள் தொடர்பில் ஆராய யசூஷி அகாஷி, நோர்வே குழுவினர் இலங்கை வருகை

(கொழும்பு)

ஜப்பான் அரசின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூஷி அகாஷி எதிர்வரும 27ஆம் திகதி இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

இலங்கை விஜயத்தை நிறைவு செய்ததன் பின்னர் ஜப்பான திரும்பும் வழியில் அவர் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டு இந்தியத் தலைவர்களையும், இராஜதநதிரிகளையும் சந்திக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய விஜயத்தின் போது இலங்கையில் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளை நீக்குவது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, அரசையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் பேச்சுவாாத்தைகளை மீண்டும் ஆரம்பிககும்படி அவர் ஆலோசனை வழங்குவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீணடும அடுத்தமாதம் ஆரம்பமாவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆயத்த வேலைகளை மேற்கொள்வதற்காக இன்னும் சில நாட்களில் நோர்வேயில் இருந்து உயர்மட்டத் தூதுக்குழுவொன்றும் இலங்கை வரவுள்ளது.

அதேவேளை, ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான பிரதிநிதிகள குழு இரு பிரிவினராக எதிர்வரும் 22,23ஆம் திகதிகளில் இலங்கை திரும்பவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-121)

# மட்டு.வில் கிரனைட் வீசசு இளைஞர் ஒருவர் பலி

மடடக்களப்பு புதுநகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம் பெற்ற கிரனைட் தாக்குதலில் இளைஞரொருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் ரஞ்சித் எனப்படும் குமாரசூரியம் மகேஸ்வரன் (வயது 26) என அடையாளம் காணபட்டுள்ளார். மத்திய கிழக்கு நாடொனறிற்கு வேலைவாய்ப்பிற்காக செலல விருந்தார். இந்நிலையில் வீட்டில் உறக்கத்திலிருந்த சமயம் அதிகாலை 1.30 மணியளவில் இவரது அறைக்குள் கூரை வழியாக இனந்தெரியாத நபர்களினால் இந்த கிரனைட் வீசப்பட்டுள்ளது. காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் சில நிமிடங்களில் மரணமானார்.


புதுநகரைப் பொறுத்தவரை பாதுகாப்பு வலயம் எனக் கருதப்படும் பிரதேசமாகும். தேசிய துணைப் படை (ராசீக் குழு), ஈபிடிபி, புளொட் போன்ற அமைப்புக்களின் உறுப்பினர்கள் பலரும் குடும்பங்களுடன் இப் பகுதியிலேயே வசித்து வருகின்றார்கள். விமானப்படைத் தளத்தை அண்மித்த பிரதேசம் என்பதால் சுற்றி வர பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட இடமாகும்.

கொல்லப்பட்டவரின் சகோதரர் குமாரசூரியம் அழகேந்திரன் என்பவர் ராசிக் குழு எனப்படும் சிறிலங்கா இராணுவத்தின் தேசிய துணைப் படை சிப்பாயாக இருக்கின்றார். இச் சம்பவத்திற்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை. தொடர்புடைய நபர்களும் அடையாளம் காணப்படவில்லை என மட்டக் களப்பு பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ந-121)

# செல்வச் செழிப்பு ஏதுமற்ற

கிழககிலே தோப்பு தொழிற் பேட்டையையும், தெற்கிலே கோணா வளை குட்டிப்புலத்தையும், வடக்கிலே மக்கோணா சீர்திருத்தப் பாடசாலையையும், மேற்கிலே சுதந் திரபுரம் ஒட்டகப்புலத்தையும் எல்லை யறைகளாகக் கொண்ட யாழ்ப்பா ணத்திலிருந்து சுமார் 12 மைல் தொலைவில் அமைந்துள்ளது செலவநாயகபுரம்.

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக எல்லைக்குடபட்ட அச்சுவேலி மேற்கு ஜே/287 கிராம சேவையாளர் பிரிவுக்குள் உள்ளடங்கும இக் கிராமம், ஆண்கள் 147 பேரையும் பெண்கள் 133 பேரையும் கொண்டதான 78 குடும்பங்களை உள்ளடக்கிக் காணப்படுகிறது.



கொள்ளப்பட்ட யுத்த நடவடிக்கையில் அநியாயமாக மீதம் எதுவுமின்றி அழிக்கப்பட்டது.

மீள் குடியமர்வின பின், 1999ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் ஜி.ரி.இசற் நிறுவனம், பிரதேச செயலர் போன்றோரின் பங்களிப்பின் மூலம் 20 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந் நிலையிலும் மீதி 58 குடும்பங்களும் ஓட்டை விழுந்த வீடுகளிலேயே காலத்தை ஓட்டவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

கூலி, கமம், மேசன், சீவல் போன்ற தொழில்களை நம்பியிருக்கும் இவ் ஊர்மக்கள், கணவன், மனைவி இருவருமே ஏதோ ஒரு வேலைக்குச் சென்றால் மட்டுமே தங்களதும் தங்கள் பிள்ளைகளதும் வயிற்றைக் கழுவமுடியும் என்ற நிலையல் வாழும் அவலநிலை காணப்படுகிறது.

## மலசலகூட வசதியில்லை

இக்குடும்பங்களில் ஒரு வீட்டிலாவது மலசல கூடத்தைக் காண்பது என்பது குதிரை கொம்பாகவே இருக்கிறது. இதனால் இங்குள்ள மக்கள் அனைவரும் காலைக் கடனை கழிப்பதற்கு பற்றைகளையே தஞ்சம் கோரும அவல நிலை காணப்படுகிறது.

"மலசலம் கழிக்காமல், பிறவி எடுத்த எந்த உயிரினமும் வாழ முடியாது. இதனால் இக்கிராம மக்கள மானத்தை விற்றுத்தான் மலசலம் கழிக்க வேண்டியுள்ளது என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்'' பொதுநலப்பற்றாளர் கே. நித்தியரத்தினம்.



'என்ரை கொட்டில்இனடைக்கோ, நாளைக்கோ பாறிவிழப் போகுது. அப்படி விழுந்தால் என்ரை குடும்பம் ரோட்டிலை தான் சவியம் நடத்தோணும்' இவ்வாறு தான்படுகிற கஷடங்களை கூறுகிறார் உறுதியற்ற வீட்டில் காலத்தை ஓட்டும், சீவல் தொழில் செய்து வயிற்றைக்கழுவும் மு.அரு மைத்துரை என்பவர்.

## வீடுகள் யுத்தத்தால் நாசம்

இச் செல்வநாயக புரத்தில் வசிப்பவர்களுக்கு, 1968 ஆம் ஆண்டு தந்தை செல்வா 54 வீடுகளை கட்டிக் கொடுத்தார். இதன் மூலம் இக்கிராம மக்கள் புத்தொளி பெறத தொடங்கினர். பெயர் சூட்டப்படாத இக் கிராமத்திற்கு செல்வா அவர்களால் மீள் வாழ்வு வழங்கப்பட்டதால, செல்வநாயகபுரம் என்று அக் காலப் பகுதியில் வாழ்ந்த அறிவு சார் பெரியோரால் பெயர் சூட்டிவைக்கப்பட்டது.

பன்னர் 1972 ஆம்ஆண்டு 54 வீடுகள பொது அமைப்புக்களால் கட்டிக் கொடுக்கப்பட்டது. இவை அனைத்தும் "விழலுக்கு இறைத்த நீர் போல'' 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தால் மேற்



சங்க நிர்வாகத்தில் அங்கம் வகிக்கும் திரு.கோ. சிவசுந்தரமூர்த்தி.

தமிழர்களுக்கு புனர்வாழ்வை அளிக்கவென செயற்படும் நிறுவனங்கள் ஒரு முறை செல்வநாயக புரததுக்குச் சென்று பார்த்தால் புரியும் அதன் அவலநிலை. அங்கே போக்குவரத்துச் செய்யும் வீதி, குடியிருக்கும் வீடுகள், மலசலகூடம், பாடசாலை, முன்பள்ளி, கிணறு போன்றவை எவ்வாறு காணப்படுகின்றன என்பது. மிகவும் வறிய நொந்து போய்க காணப்படும் மக்களுக்கு அடிப்படைத் தேவையை யாராவது பூர்த்தி செயய இந் நிறுவனங்கள் வழிசெய்யவேண்டும்.

"உழைப்பு சீரின்மை, மக்களின் வறுமை நிலை, இளம் பிராயத்தினரின் எதிர்காலத்தை இருள்மய மாக்க வழிசமைக்கிறது. இதனால் இளம் மாணவா் சமுதா யமாக மிளிரவேண்டியவர்கள் இளம் தொழிலாளர்களாக மாற்றப் படுகின்றனர். இக் கிராமத்தவர் களுக்கு இது சர்வசாதாரணமான விடயமாகத் தென்படுகிறது'' என்று கூறினார்.மக்கள் நலன்காக்கும் பிரிவுத் தலைவர் வ.செல்வத்துரை.

**படங்கள்: அ.ஜனதீபன்**

ளைக் கொண்டவையாகக் காணப்படுவதால் நாளுக்கு மூன்று தடவையாவது சைக்கிளை ஓட்ட வேண்டிவருகிறது'' என்று கஷ்ட

**ஊர்த் தரிசனம் 12**

உணர்வை விபரிக்கிறார், கஷ்டத்தின நிமித்தம் கல்வியை இடைநிறுத்திய ஆறு பெண்களின் சகோதரரான இ.இரத்தினகுமார்.

## மருத்துவ வசதியில்லை

மருத்துவ செயற்பாட்டிற்கு வைத்தியசாலை வசதி, கல்லில் நாருரிப்பது போலக் காணப்படுகிறது. ஏனெனில் ஒருமாத பாலகன் முதல் கர்ப்பிணிப் பெண்கள் உட்பட முதியோர் வரை சீரற்ற வீதியால் இரண்டு மைல தூரம் கால் கடுக்க நடந்து சென்றே அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சை பெறவேண்டும். தீவிர சுகயீனமானாலும் கூட தனியார் வைத்திய நிலையங்களும் இல்லாத நிலையே காணப்படுகிறது. ஆகவே யாழில் வசிக்கும் ஏனைய மக்களைப போல இம் மக்களும் தங்களுடைய வாழ்வில் சிறிதாவது உயர்வு பொறுவதற்கு தொடர்புடை அனைவரும் ஆவன செய்யவேண்டும்.

உணவுப்பொருட்களை நியாய விலை கொடுத்து வாங்குவதற்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் ஒன்றையாவது இங்கு காணமுடியாது. மக்கள் தங்கள் நிவாரணப் பொருட்களை பெறுவதற்குக்கூட இரண்டரை மைல் தூரத்தில் உள்ள தோப்புககிராம சங்கக்கடையையே நாட வேண்டிய நிலை காணப்படுகிறது.

## மின், தபால், தொலைத்தொடர்பு வசதிகள் இல்லை

யாழ். குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்கி இரு வருடங்கள் கழிந்த நிலையிலும் மின்சார வசதியோ, தொலைத் தொடர்பு வசதியோ அறிமுகப் படுத்தப்படாத கிராமமாக செல்வநாயக புரம் காணப்படுகிறது.

சாதாரண தபால் போடுவதற்கு தபால் பெட்டி கூட இக் கிராமத்திற்குள் இல்லை. பொதுச் சொத்துக்களில் ஒன்றைக் கூட இக்கிராம மக்கள் அனுபவிக்கவில்லை என்று கூறலாம் "ஐந்து ரூபாய் முத்திரை ஒட்டி சாதாரண கடிதம் அனுப்புவதற்கு தபால் பெட்டி கூட இல்லாத கிராமமாக உள்ளமை மிகவும் மன வேதனையை தருகிறது'' என்றார். சமாதான நீதவான் கி. தங்கவடிவேல்

இம்மக்கள் எந்தவகை கடிதங்களை அனுப்பவேண்டுமானாலும் ஒன்றில் அச்சுவேலி சந்திக்கோ அல்லது நிலாவரை சந்திக்கோ இரண்டரை மைல் தூரம் சென்றே தங்கள கடிதங்களை அனுப்பவேண்டிய துன்பங்கரமான நிலை எப்போது

முடிவுக்குவரும் என்பது இம் மக்களின அங்கலாய்ப்பு.

இக்கிராமத்தில் குடிக்கின்ற தண்ணீருக்கு ஒரு மவுசு இருக்கின்றது. ஏனெனில் பசியையும் தீர்க்க கூடிய ருசி கொண்டது இவ்வூர்த் தண்ணீர். 1968ஆம் ஆண்டு 13 கிணறுகள்தோண்டப்பட்டன. இவை சரற்ற நிலையயில் இருந்ததால் 1999 காலட் பகுதிகளில் "மொவி மொண்டோ'' அமைப்பினால் திருத்திக் கொடுக்கப்பட்ட தாயினும் முழுமையாகத் திருத்தப்பட வில்லை.

மிகவும் ஆழமானதாகக் காணப்படும் இக் கிணறுகள், படிகள் எதுவுமற்ற நிலையில் காணப்படுகின்றது. இவற்றில் தற்பொழுது 5 கிணறுகள் பாவனைக்குதவாததாகக் காணப படுகின்றன. மனித முயற்சியால் இரண்டு குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

குடும்ப தலைமையை பெண்களே கொண்டு நடாத்துகின்ற 8 குடும்பங்களும், பொதுசன மாதாந்த உதவிப் பணம பெறுவோர் 7பேரும் தங்களுக்கு கருணைக் கரம் நீட்ட யாராவது முன்வர மாட்டார்களா என்ற எதிர் பார்ப் போடு காலத்தை ஓட்டுகிறார்கள்.

## காணி, விவாகப் பதிவுகள் இல்லை

78குடும்பங்கள் தங்கள் சொந்தக் காணிகளில் வதிபவர்களாக காணப்படினும் 13 குடும்பங்களுக்கே காணியை அத்தாட்சிப் படுத்தக் கூடிய காணி உறுதிப்பத்திரம் உள்ளது. மீதி 65 குடும்பங்களுக்கும் காணி உறுதி இல்லாதநிலை காணப்படுகிறது. இதேபோல் திருமண அத்தாட்சிப் பத்திரமும் மேற்கூறிய ஒரு குடும்பமும பெற்றிராத நிலை காணப்பட்ட போது, அண்மையில் மக்கள் நலன்காக்கும் பிரிவும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து 24 குடும்பங்களுக்கு திருமணப்பதிவு மேற்கொள்ளபபட்டு, உடனடியாகவே அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்பட்டது. மீதி 54குடும்பங்களும் அத் தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு வகை யில்லாதவர்களாக காணப்படுகின்றனர்.

**தரிசனம்**
**ஏ.எஸ்.லோகதாஸ்**

# செல்வநாயகபுரம்

**தொகுப்பு:- பிரம்ம சாத்வி**

## கல்விநிலை பின்னடைவு

இததகைய இக்கட்டான சூழ் நிலையிலும் 66 மாணவர்கள் கல்வியைத தொடர்கின்றனர்.27 மாணவர்கள் கல்வியைக் கைவிட்டுள்ளனர்.

25 மாணவர்களுக்கு அடிப்படை கல்வியை புகட்டும் தந்தை செல்வா முன்பள்ளியானது, 15 கதிரை, மேசையுடனும் பூரணமாக புனர்நிர்மாணம் செய்யப்படாமலும் காணப்படுகிறது. இம் முன்பள்ளியில கல்வி கற்கும் மாணவர்கள ஒரு தொகையைக் கட்டணமாகச் செலுத்து கிறார்கள்.

## சீரற்ற வீதிகள்

இதுவரை காலமும் தார் இடப்படாத வீதிகள் செல்வநாயகபுரத்தில் எப்போது செப்பனிடப்படுமோ தெரியவில்லை. வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் செல்வநாயக புரக் கிராமம் என்ற ஒரு கிராமம் உணடு என்பதை இதுவரை காலமும் அறிந்தார்களோ தெரியவில்லை. அறியாவிட்டால் இச் செய்தி மூலம வீதியை செப்பனிடுவதற்கு ஒரு முறை சென்று பார்க்க வேண்டு கோள விடுககிறோம். "தா எண்டதை கண்டறியாத எங்கடை ரோட்டுகளுக்கு எப்ப தாரை வார்த்து கொடுக்கப் போகிறார்களோ தெரியவில்லை. எந்தவித போக்குவரத்தைச் செய்வ தற்கும் தேவையானது ஒழுங்கான [illegible]

## சேவை நிறுவனங்களின் அக்கறையின்மை

இது வரையிலும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்று கூட இக் கிராமத்தில் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. "எந்த அத்தியாவசிய தேவைகளும் கிடைக்காத நிலையில் இந்த ஊர் மக்கள் வாழ்ந்து வருகின்றமையை அறியும் போது பெரும் மன வேதனையைத் தருவதாக உள்ளது'' என்றார் யாழ். [illegible]



ஆகவே அடிப்படைத் தேவைகள் எதுவும் பூர்த்தி செய்ய முடியாது தவிக்கும் இச் செல்வநாயகபுர மக்களுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள்,வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்றவற்றின் அதிகாரிகள் இவ் விடயத்தில் அலட்சியமாக செயற்படாமல் கடமையுணர்வோடு செயற்படவேண்டியது அவசியமாகின்றது.

கல்வியாளர்கள், செல்வந்தர்கள் இம் மக்களுக்கு இனியாவது தங்கள உதவிக் கரங்களை நீட்ட வேணடும். செல்வநாயகபுர கிராமம் இனியாவது புத்துயிர் பெறுவதற்கு உதவ வேண்டும். கல்வி, பொருளாதார முனனேற்றத்திற்கு எம்மாலான பங்களிப்பை அர்ப்பணிப்போடு வழங்குவோம். ★

### ஏறுகிறதோ?

கொலைப் பிரசவங்களை பிரசவித்து
கம்பிக்கூடுகளை உருவாக்கி
இடம்பெயர்வுகளைத் தந்து
அகதிகளாய் பெயர்சூட்டி
தமிழரை அங்கலாய்த்த
வேதாளம் மீண்டும்
முருங்கை மரத்தில் ஏறுகிறதோ?

இன்பராஜ், மீசாலை.

### வரவைத்து விட்டதா?

பிணம் தின்னும்
கழுகு மனிதனே!
பிணத்தின் மணம் உன்னை
இலங்கைக்கு வர
வைத்துவிட்டதா?

A.சரிதா,
வவுனியா.

### ஈடு இணை

இறக்கை முளைத்த கற்பனை மனிதா!
புரிகிறது உன் கற்பனை புரிகிறது!
எவரெஸ்ட்டின் உச்சியைத்
தொட்டிட உயரும் - நம் நாட்டின்
எரிபொருளின் விலையேற்றத்திற்கு
ஈடு இணை இதுவும் ஒன்றோ?


த.அகல்யா.சந்நிதி.

### தர்வு

எரிபொருள் விலையேற்றம்...
இதனால் போக்குவரத்து அதிகரிப்பு
இப்பிரச்சினைக்குத்
தீர்வுகாண நினைத்த
விஞ்ஞானத்தின் விளைவு
சுலபமான தீர்வு....
விதி விபத்தில்லாத தீர்வு.

K.K. அன்ரன், மீசாலை.

## மௌனத்தின் தேடல்கள் – 31



### எழுந்திரு!

மனிதா! ஏன் இந்த அழுகை
தமிழனின் வாழ்க்கையில்
கண்ணீருக்குப் பஞ்சமில்லை
சமாதானப் புறாக்கள் சிறகினை
இழந்தன!
உனக்கு முளைத்தன வீரச்சிறகு
இனி யாரையும் எதிர்பாராதே!
நீயே புறப்படு! - இந்த
சமாதானம் நிலைக்குமா என
சல்லடைபோட்டுத் தேடி வா
உன் வரவை ஆவலுடன்
எதிர்நோக்குகின்றோம்.

M.இந்திரகலா, யோகபுரம்.

### நீ மனிதனா?

ஆஹா.....மனிதா!
நீ கெட்டது போதாதென்று
பறவைகளையும்....
பட்சிகளையும்.....
கெடுக்க ஆயத்தமாகிவிட்டாயா?
உன் குணம் உயர்குணம்?!
மறந்துவிடாதே!
மரணிக்கும் வரை மனிதனாக
இருக்க முயற்சிசெய்!

P.செல்வராணி,
வட்டுக்கோட்டை.

### சுதந்திரம் எங்கே...

வானுயர இறக்கை பெற்ற - நீ
முகம் புதைப்பது ஏனோ...?
சமாதானம் எட்டியும்
சுதந்திரம் கிடையா.....
உறவிழந்து நாடிழந்த
அகதித் தமிழனா - நீ

V.கிரிதரன், மானிப்பாய்.

### புறப்படு தமிழ் மகனே!

சிறகை விரித்துவிட்டு
சிந்தனை இனியெதற்கு?
சீக்கிரமாய்ப் பறப்படு உதயத்தில்
சிறையிலிருந்து வெளியேற - சுறுசுறுப்பாய்
சுக்குநூறாய் "உடைத்துவிடு -கைவிலங்கை
சுதந்திரமாய் மலரட்டும் தமிழ் ஈழமதே.

நீர்வை மாறன்.

### பறக்க மறந்தது ஏனோ...?

உன் விரிந்த சிறகுகள்
பறக்க மறந்தது ஏனோ...?
ஆசிரியர் தினத்தில்.....
ஆசிரியரால் புறந்தள்ளப்பட்ட
மாணவரை எண்ணியோ....?
சமாதான காலத்தில்.....
இழந்துவிட்ட சமாதானத்தை
எண்ணியோ...? - காலத்தின் கோலத்தால்...
பிளவுபட்ட எம் இனத்தை எண்ணியோ...
ஓ....! மறந்துவிட்டேன்
ஓடிவிட்ட - உன் காதலியை எண்ணியோ..

பூ.அன்பரசி, புங்கையூர்.

### புறப்படு!

மானிடனே இனியும் ஏன் தாமதம்?
தாமதிக்கும் ஒவ்வொரு "விநாடியும்
உன் சுதந்திர சிறகிற்கு அழிவு காத்திருக்கு
பாழ்பட்ட பாவிகளிடம்
பட்ட துன்பம் போதும் புறப்படு
மானிடப் பறவையே! - உன்
சுதந்திர வாழ்க்கைப் பயணத்திற்கு!

G.M.நிக்ஷன், வவுனியா.

## மௌனத்தின் தேடல்கள் -33



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை **மேற்சித்திரக் கவிதைகளாக் கித் தபால் அட்டையில்** வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள். **கிடைக்கவேண்டிய இறுதித்திகதி** - 24.10.2004

அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள் - 33
வலம்புரி - சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்



### முன்னுரைகளும் முடிவுரைகளும்

கனவுகள் பல மூட்டையாய்
கட்டப்பட்ட களங்கமான
முகத்திலே....
சோகக் கதை செப்பும்
கரிய விழியிரண்டு
அதன் வெளிச்சப் பார்வைக்குள்
கானல் நீரிலே
மௌனித்திருக்கும்
குறுகிய உதடு
நகரமுடியாமல் மோப்ப
சக்தியிழந்த நெடிய மூக்கு
என் முகத்திற்கு இது முன்னுரை
வாழ்க்கையின் அர்த்தத்திலே
நான் அணிந்துரையைத்
தேடிக்கொண்டிருக்க....
என் உடல் தனக்கு முடிவுரையே
எழுதிக்கொண்டது.

ஜெ.சுபாஷினி.

### ஓட்டை

குப்பி விளக்குகள் தேவையில்லை
குடிசை ஒளி பெற
ஏனெனில் - இப்போது
நிலாக்காலம்

### காத்திருப்பு

அமாவாசை இருட்டில்
அண்ணன் வரவிற்காய்
அம்மா காத்திருக்கிறாள்
ஓர்பிடி அரிசியுடன்...
ஜன்னல் ஓரம்

### வறுமை

சோற்றுப் பானைக்குள்
பிஞ்சு விரல்கள்
எட்டிப் பார்த்தபோது
பொட்டுப் பூச்சிகளின்
எச்சில் வலைகள்.

M.சுதாகர்.
பருத்தித்துறை.

### இரு கோடுகள்



சித்திர மனசு காணும்
வண்ணங்கள்
சங்கீத நெஞ்சம்
கேட்கும் கானங்கள்
எல்லாம் அவளுக்குள்!
சரித்திரமான ஒரு
சம்பவத்தின் சாரல்
ஒப்பாரியில் தொடங்கிய
தப்புக் கணக்குகளின்
அப்பாவிச் சுமைகள்
எல்லாம் அவனுக்குள்!
இணை பிரியாத
தண்டவாள ஜோடிகள்
இணைவதுதான் எப்போது?
தூரத்தில் புகையிரதம்
பூரிக்கும் சப்தம்
புரியாத புதிர்களாய்
நீண்டு கிடக்கும்
இருகோடுகள்!

ஜோ.ஜெஸ்ரின்,

### மின்மினி

இருள்வளையில்
சிக்கிடாத விசித்திரமே!
வானக்கடையிலா
வாங்கினாய் - இந்த
வண்ண மேனியை?!

கு.தவசீலன், விசுவமடு.

### குடிகாரன்

இவனுக்கு
இரவில் மட்டும்
நான்கு கால்கள்

### தபால்காரன்

தினமும் சந்தம்
மாறாமல் மணி
அடிக்கும் தெருப்பூசகர்

### பால்காரன்

வாடிக்கையாளர்களுக்கு
தினமும்
மணி அடித்து
தண்ணி காட்டுபவன்

ராகுல், பிறவுண் வீதி.

### மௌனத்தின் பாரம்

என்றோ ஒருநாள்
எனக்குள் விதையாக விழுந்தாய்
அக்கணமே
எனக்குள் நீ விருட்சமாகி விட்டாய்
மௌனத்தால் ஏங்க வைப்பவனே
ஊமையாய் தானே என்னுள் - நீ
ஊர்ந்து திரிகின்றாய் - உன்னை
புரிந்துகொள்ள என்னால் முடியவில்லை
உன் பார்வை வீச்சினிலே
என்னிதயத்தில் பூகம்பங்கள்
எழுந்து நடனமிடும் - நீ
பேசும் பேச்சினிலே
எரிமலைகள் வெடித்துச் சிதறும் - நீ
சிந்தும் சிரிப்பினிலே சுவாச
சிற்றறைகளும் சிக்கித் தவிக்கும்
உன்னால் மட்டும் எப்படி
மௌனமாயிருந்து கொண்டே
உசிரைப் புடுங்க முடிகின்றது
அறிய எனக்கென்றால் ஆவல்தான்
வழியின்றி வதைபடுகின்றேன்
வடுவின்றி வலி கொள்கிறேன்
உனக்குள் இடம்பெயர்ந்த
என்னிதயம் தன்னிடம்
திரும்ப மறுக்கின்றது
காதல் செய்யும் மாற்றம்
ஆன்மாவோடு கலந்துபோகும்
காதலன் நீ செய்யும் மாற்றமோ?
ஆன்மாவோடு சேர்ந்து - என்
ஆக்கங்களையும் அடியோடு மாற்றும்.



ம.நர்மதா, உடுவில்.

### நம் தேசம்

மரணித்துப்போன எங்கள் மௌனத்தனமான வாழ்வு
கன்னிக் கற்பழிப்பும் கனத்துப்போன யுத்தங்களும்
சிந்திய குருதியால் கண்டது ஏதுமில்லை
ஊதிய உழைப்புத்தேடும் நாதியற்ற நம் வாழ்வு
ஊழல்கள் பலவாகி குரல்வளைக்குள் நசியுண்டு
குற்றியெடுக்கும் பச்சைமயில் நோட்டுக்களும்
ரயில் ஏறிப் பயணமாகும் ரக்ஸ் வசூலிப்பால்
அந்நிய மோகத்திலே அரை மீற்றர் துணியினிலே
பெண்ணியப் பேயின்று ஊசலாடும் சமுதாயம்
வெறியாடும் பானத்திலே கதிமாறும் இளைஞர்களும்
வழிமாறு மோகத்திலே சினிமாத்தியெட்டர்களும்
எயிட்ஸ், ஹூஸ் என்று ஏராளம் நோய்களுடன்
கயஸ் வாகனங்கள் கதறுகின்ற சத்தங்களும் - என்று
மோசமான விபத்துக்களால் நாசமாகுது நம்தேசம்.

மு.சுகந்தினி, அச்சுவேலி.





### பாக்டெல் முக்கோண இறுதிப்போட்டி


# கிண்ணத்தை வென்றது இலங்கை அணி

## பாகிஸ்தானுக்கு அதிர்ச்சித் தோல்வி



















பாக்டெல் கிண்ண முககோண ஒருநாள் போட்டித்தொடரின் இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து 119ஓட்டங்களால் இலங்கையணி படுதோல்வியடையச் செய்துள்ளது. இதன் மூலம் பாக்டெல் கிண்ணத்தை இலஙகையணி தனதாக்கிக்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் லாகூரில் கடாபி மைதானததில் நேற்றுமுனதினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸதான் அணித்தலைவா இன்சமாம்-உல்ஹக் இலங்கையணியைத் துடுப் பெடுத்தாட அழைத்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாட இலங்கையணியின் ஆரம்பத துடுப்பாட்ட வீரர்களாக சமன் ஜெயந்தவும் சனத் ஜெயசூரியாவும் களமிறங்கினர்.

இலங்கையணியின் ஆரம்பம் சிறபபாக அமையவில்லை. அணி ஓட்டம் எதுவும் பெறாதநிலையில் சமன் ஜயநத ரண அவுட் முறையில் ஆட்டமிழந்தார். அணி 35ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை சனத் ஜெயசூரியா 21ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தர்.

35ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றுக்களை இழந்து இக்கட்டான நிலையிலிருந்த இலங்கையணியை அதன்பின் ஜோடி சேர்ந்த அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து, மற்றும் குமாா சங்ககார ஆகியோர் தூக்கி நிறுத்தினர்.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த இந்த ஜோடி 3ஆவது விச் கெற்றுக்காக 106ஓட்டங்களைப பெற்றுக்கொண்ட போதிலும் அணி 141 ஓட்டங்களை பெற்றிருந்தவேளை அணித்தலைவர் மாவன் அத்தப்பத்துவை இழந்தது.

இவர் 94 பந்துகளை எதிர்கொண்டு 6 பவுண்டரிகள் உட்பட 66 ஓட்டங்களுக்களைப்பெற்றார். இதே வேளை, அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த குமார் சஙககார 68 ஓட்டங்களைப் பெற்றவேளை அப்துல் ரஸாக்கின் பந்து வீசசில் நேரடியாக விக்கெற் வீழ்த்தப்பட்டு ஆட்டமிழந்தார். இவர் 69 பந்துகளை எதிர்கொண்டு 7 பவுண்டரிகள் அடங்கலாக இவ் ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றார்.

அதனையடுத்து ஜோடி சேர்ந்த மஹேலவும், டில்ஷானும் 5வது விக்கெறறுக்காக 63ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். அணி 214 ஓடடங்களைப் பெற்றிருந்த வேளை டில்ஷான் 39ஓட்டங்களுடனும், 257 ஓடடங்களைப் பெற்றிருந்தவேளை மஹேல ஜெயவர்த்தன 49ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இலங்கையணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெற்றுக்களை இழந்து 287 ஓட்டங்களைப்பெற்றது. உதிரிகளாக 17 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சஹிட அவரிடி 10ஓவர்கள் பந்துவீசி 60 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினார் அத்துடன் நவீட்-உல்ஹஸன், முஹமட் சமி, சொகைப் மாலிக் மற்றும் அப்துல் ரஸாக் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

இதையடுத்துக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி இலங்கையணிப பந்துவீச்சாளர்களின் அதிரடிப்பநதுவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல நிலைகுலைந்து போனது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய சல்மான் பட், யஸீர ஹமீட் ஆகியோர் முதலாவது விக்கெற்றுக்காக 40ஓட்டங்களைப்பெற்றனர். யஸீர் ஹமட் 18 ஓட்டங்களுடன் பெர்னானடோவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து சென்றார். அதன பின்னர் சல்மான் பட்டுடன் ஜோடி சேர்ந்த சொகைப் மாலிக் இருவரும் சற்று நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய போதும் அணி 85ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை சல்மான்பட் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

அதனபின்னர் பாகிஸ்தான் அணியின் விக்கெற்றுக்கள் மள மளவெனச் சரியத்தொடங்கின. அடுத்த 83 ஓட்டங்களுக்குள் மிகுதி 8விக்கெற்றுக்களையும் அடுத்தடுத்து இழந்தது. அதன்படி பாகிஸ்தான் அணி 38 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 168 ஓடடங்களை மாத்திரமே பெற்றது.

இலங்கையணி சார்பில் பந்துவீச்சில் சனத் ஜெயசூரிய மிகச் சிறப்பாகப் பந்துவீசி தனது திறமையை வெளிப்படுத்தினார். 8 ஓவர்கள் பநதுவீசிய சனத்ஜெயசூரியா 17 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெற்றினை வீழ்த்தினார். இதில் 2ஓட்டமற்ற ஓவர்கள அடஙகும் அத்துடன் உப்புல சந்தன 10 ஓவர்கள் பந்து வீசி 56 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெற்றுக்களையும் சமிந்தவாஸ் 42 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெற்றினையும், பெர்னான்டோ 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெற்றினையும் வீழ்ததினர். இறுதிப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக விக்கெற்காப்பாளர் குமார் சங்ககாரவும் போட்டியின் தொடர் நாயகனாக சொகைப் மாலிக்கும் தெரிவு செய்யப்பட்டனர். (க-7,121)

## இந்தியா - அவுஸ்திரேலியா

# இரண்டாவது டெஸ்ட் போட்டி

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளிடையே சென்னை எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நடைபெறும் இரணடாவது டெஸ்ட் போட்டியில், மூன்றாவது நாள் ஆட்ட முடிவில அவுஸ்திரேலிய அணி 4 விக்கெற் இழப்பிற்கு 150 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 235 ஓட்டங்களையும், இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 376 ஓட்டங்களையும் பெறறன. இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெற்றுக்களை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி, நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டம் தொடர்ந்தபோது, ஆட்டமிழக்காதிருந்த கைவ் 34 ஓட்டத்துடனும் பார்த்திவ் பட்டேல் 27 ஓட்டத்துடனும் ஆட்டத்தை தொடர்ந்தனர்.

இவர்கள் இருவரும் எழாவது விக்கெற்றுக்காக 102 ஓட்டங்களை எடுத்தனர். மதிய உணவு இடைவேளையின் போது இந்திய அணி 7 விக்கெற் இழப்பிற்கு 363 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பார்த்திவ்பட்டேல் 54 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மதிய உணவு இடைவேளையின் பின்னர் உடல் நலமின்மையால் கைவ் தொடர்ந்து விளையாடவில்லை. கும்ளே 20 ஓட்டங்களுடனும் ஹர்பஜன்சிங் 5 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழந்தனர். மீண்டும் ஆடவந்த கைவ் 64 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டமிழந்தார். இந்திய அணி 376 ஓட்டங்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. அவுஸ்திரேலியாவைவிட 141 ஓட்டங்கள் அதிகமாக இந்திய அணி பெற்றது.

ஷேர்ன்வோன் 125 ஓட்டங்களைக கொடுத்து 6 விக்கெற்றுக்களைப் பெற்றார். இது அவர் இந்தியாவுக்கு எதிராக 5 விக்கெற்றுக்கு மேல் விக்கெற் பெற்ற முதல் சந்தர்ப்பமாகும்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸ்சை விளையாடிய அவுஸ்திரேலியா மூன்றாவது நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெற்றுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹேடன் 39 ஓட்டங்களுடனும் ஹடிச் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இறுதியாக கில்கிறிஸ்ட் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கும்ளே 3 விக்கெற்றுக்களையும் சஹீர்கான் 1 விக்கெற்றையும் பெற்றனர்.

ஆட்டநேர முடிவில் மாாட்டின் 19 ஓட்டங்களுடனும் கில்லெஸ்பி ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

நேற்று 4ஆம் நாள் ஆட்டம் தொடர்ந்தபோது, தொடர்ந்து ஆடிய மார்டினும் கில்லெஸ்பியும் மிகச் சிறப்பாக விளையாடினர். தேநீர் இடைவேளைக்குச் சற்று முன்பாக மாட்டீன் 104 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கில்லெஸ்பியும் ஆட்டமிழந்தார்.

## விளையாட்டு செய்திகள்

### உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

வடமராட்சி வலயமட்ட பாடசாலைகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாம கட்டப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெறும் இப் போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானம், அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானம் என்பவற்றில் பி.ப.2.30 தொடக்கம் இடம்பெறும். இப் போட்டிகள் யாவும் விலகல் முறையில் அமைந்திருக்கும்.

16, மற்றும் 18 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெறும் இப் போட்டியில் பின்வரும பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

18 வயதுப் பிரிவில் பங்குபற்றும் பாடசாலைகள்:- நெல்லியடி ம.ம.வி, ஞானசாரியார் கல்லூரி, சிதம்பராக்கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி, உடுப்பிட்டி அ.மி.க, ஹாட்லிக் கல்லூரி, கொற்றாவத்தை அ.த.க, தேவரையாளி இந்துக்கல்லூரி.

16 வயதுப்பிரிவில் பங்குபற்றும் பாடசாலைகள்:- கொற்றாவத்தை அ.த.க., தேவரையாளி இ.க., உடுத்துறை ம.வி., சிதம்பராக கல்லூரி, சிவகுரு வித்தி., விக்னேஸ்வராக கல்லூரி, வேலாயுதம் ம.வி., உடுப்பிட்டி அ.மி., ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி ம.ம.வி. ஆகியவை. (க-7)

### தென் ஆபிரிக்கப் பயிற்சியாளர்

## எரிக் சைமன்ஸ் ராஜினாமா

தென்னாபிரிக்கக் கிரிக்கெற் அணியின் பயிற்சியாளர் எரிக் சைமன்ஸ் ராஜிநாமாச் செய்துள்ளார்.

சமீப காலங்களில் தென்னாபிரிக்கா மோசமாக விளையாடி வருவதையடுத்து சைமன்ஸ் இந்த முடிவை மேற்கொணடுள்ளார். இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம செய்ய ஒரு மாதத்துக்கு முன்பாக அவர் ராஜிநாமாச் செய்துள்ளது. குறிப்பிடத்தக்கது.

தென்னரிபிரிக்கக் கிரிக்கெற் சபைச் செய்தித் தொடர்பாளர் இதை உறுதி செய்தார்.

இலங்கையில் தென்னாபிரிக்காவுககு கிடைத்த தோல்வி குறித்தும் ஐ.சி.சி.சம்பியன் கோப்பையில் மோசமாக விளையாடியது குறித்தும் கடும் கண்டனங்கள் எழுந்தன. இதையடுத்து இம் முடிவை அவர் மேற்கொண்டுள்ளார்.

ஸ்டீவ்வோவ், ஜெப் மார்ஷ், டொம் மூடி ஆகியோரில் ஒருவர் புதிய பயிற்சியாளராக நிமியக்கப்படலாம் எனத் தெரிகிறது. எனினும் இந்தியத் தொடருக்கு மட்டும் முன்னாள் டெஸ்ட் ஆட்டக்காரர் நே.ஜென்னிங்ஸ் நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது. மேலும் முன்னாள் மேலாளர் கூலம் ராஜா மீண்டும் அழைக்கப்படலாம் எனவும் தெரிகிறது. சைமன்சின் ராஜிநாமாவையடுத்து தோவுக்குழு அமைப்பாளர் ஓமர் ஹென்றியின் பதவிக்கும் ஆபத்து எழுந்துள்ளது. (க-7)

## உலக செஸ் ஒலிம்பியாட்டில்

# இந்தியாவுக்கு நல்ல ஆரம்பம்

உலக செஸ் ஒலிம்பியாட் தொடரில் இந்தியாவின் ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் வெற்றியுடன் போட்டிகளை ஆரம்பித்திருக்கின்றன.

ஸ்பெயினில் உள்ள மல்லோர்கா நகரில் உலகின் முன்னணி கிராண்ட் மாஸ்ர்கள் பங்கேற்கும் உலக செஸ் ஒலிம் பியாட்தொடர் அண்மையில் தொடங்கியது. முதல் சுற்றில் இந்திய ஆண்கள அணி உருகுவே அணியை சந்தித்தது. இந்திய அணியின் நடசத்திர வீரான விஸ்வநாதன் ஆனந்த் தேசிய சம்பியன் சேகர் கங்குலி இருவருக்கும் முதல் சுற்றில் ஓய்வு அளிக்கப்பட்டது. இவாகளுக்கு பதிலாக சசிகிரண், அபஜித் குந்தே, ஹரி கிருஷ்ணா, சந்தீபன் சந்தா ஆகியோர் அணியில் இடம் பெற்றனர். முதல் மூன்று போட்டியில் சசிகிரண், அபஜித், ஹரிகிருஷ்ணா ஆகியோர் ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்தனர்.

நான்காவது போட்டியில விளையாடிய சந்தீபன் சந்தா, அலி[illegible]ட்ரோ பாஸாவை வீழ்த்த இந்திய அணி .2.5,1.5என்ற புள்ளி கணக்கில் தொடரின் முதல் வெற்றி பெற்றது. பெண்கள் பிரிவில் இந்திய அணி முதல் சுற்றில் மெக்சிகோவை எதிர்த்து விளையாடியது. இதில் இந்திய வீராங்கனைகள் 2.5,0.5 என்ற புள்ளிகணக்கில் வெற்றிபெற்னர். (க-7)


# க.பொ.த (சாதாரண தரம்)
## மாதிரிப் பரீட்சை - 2004
## சமூகக்கல்வியும் வரலாறும்

ஆக்கம்: திரு.S.P.சர்மா B.A Geo.Sp
பிரதி அதிபர், யாழ்.கந்தரோடை
தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

நேரம்: 1மணி

பகுதி - I

**தரப்பட்ட இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




**01.** C எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இலங்கையின் இல்மனைட் கனிய மணல் காணப்படும் இடம்.
1.புல்மோட்டை 2.திருகோணமலை
3.அம்பன் 4.நிலாவெளி

**02.** E என்ற எழுத்துக் குறிக்கும் புராதன குளம்
1.கந்தளாய்க் குளம் 2.இராட்சதக் குளம்
3.கலாவாவி 4.சேனநாயக்க சமுத்திரம்

**03.** M என்ற எழுத்துக் குறிப்பிடும் இலங்கையின் புராதன துறைமுகம்
1.கோகர்ண 2.ஜம்புகோணப்பட்டினம்
3.தேவநகர 4.ஊராத்தோட்டை

**04.** கடும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டு பெரும் அழிவு ஏற்பட்ட நகரை A எழுத்துக் குறிக்கின்றது. அந்நகரம்,
1.காலி 2.மாத்தறை
3.இரத்தினபுரி 4.களுத்துறை

**05.** படத்தில் B,S,O,N என்ற எழுத்துக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் குறிக்கின்றன. அவற்றின் சரியான ஒழுங்கு
1.மாதோட்டம், கோகர்ண, சிகிரியா, தேவநகர
2.யம்புகோணப்பட்டினம், ஊராத்தோட்டை, கோகர்ண, தேவநகர
3.யம்புகோணப்பட்டினம், மாதோட்டம், அனுராதபுரம், கோகர்ண
4.பொலநறுவை, யம்புகோணப்பட்டினம், கோகர்ண, மாதோட்டம்

**06தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு உலகப் புறவுருவப் படத்தை அவதானித்து விடை தருக.**




**06.** அமெரிக்கா தலைமையிலான படையினரால் தாக்குதல் நடாத்தப்பட்டு சதாம் உசைன் பதவி இறககப்பட்ட ஈராக் நாட்டைக் குறிக்கும் எழுத்து.
1. C 2. A 3. M 4. L

**07.** இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின். உச்சி மாநாடு இறுதியாக நடைபெற்ற நகரத்தினை X என்னும் எழுத்து குறிக்கின்றது அந்நகரம்.
1.பாரிஸ் 2.மனிலா 3.டோக்கியோ 4.நியூயோர்க்

**08.** இந்த ஆண்டு சார்க் உச்சி மகாநாடு நடைபெறும் இடம் எந்த எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது.
1.M 2.R 3.W 4.Y

**09.** Z என்ற எழுத்தினால் குறிப்பிடப்படும் மலைத்தொடர்
1. அந்தீஸ் 2. அற்லஸ் 3. றொக்கி 4. அப்பலாச்சியன்

**10.** தற்போதைய ஐ.நா படையின் செயலாளரது தாய்நாடான கானாவைக் குறிக்கும் எழுத்து.
1. E 2. M 3. S 4. O

**11.** கொழும்புத் திட்டம் பற்றிய கூற்றுக்களில் சரியான கூற்று
1.அபிவிருத்தி அடையும் நாடுகளுக்கிடையில் வியாபாரத்தை விருத்தி செய்ய நிறுவப்பட்டது.
2.தென் ஆசிய, தென் கிழக்கு ஆசிய அபிவிருத்தி கருதி நிறுவப்பட்டது.
3.கொழும்பு பிரதேச அபிவிருத்திக்கு நிறுவப்பட்டது.
4.உலக சமாதானத்தை உறுதிப்படுத்த நிறுவப்பட்டது.

**12.** படித்த இலங்கையராக சேர்.பொன்.இராமநாதனை சட்டவாக்க சபைக்கு தெரிவுசெய்ய வழிவகுத்த யாப்பு.
1.கோல்புறுக் யாப்பு 2.மக்லம் சீர்திருத்தம்
3.மனிங் சீர்திருத்தம் 4.டொனமூர் யாப்பு

**13.** கண்டி இராச்சியத்தின் கடைசி சிங்கள மன்னன்
1.2ம் இராஜசிங்கன் 2.2ம் விமலதர்மசூரியன்
3.ந[illegible]சிங்கன் 4.விக்கிரம இராஜசிங்கன்

**14.** இன்றைய உலகில் வெளிநாட்டு உதவி பற்றிய எண்ணக்கரு பிறப்பதற்கு அடிப்படையாக அமைந்தது.
1.மார்ஷல் திட்டம் 2.பொதுநலவாயம்
3.உலக வங்கி 4.சார்க் அமைப்பு

**15.** பிரித்தானிய குடியேற்ற நாடுகளாக இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளால் அமைந்த அமையம்.
1.ஐ.நா ஸ்தாபனம் 2.உலக வங்கி 3.பொதுநலவாயம் 4.ஒபெக்

**16.** இலங்கைப் பிரஜை ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பின் அது தொடர்பாக அவர் முறையிடவேண்டிய நீதிமன்றம்.
1.மேன்முறையீட்டு நீதிமன்றம் 2.மாவட்ட நீதிமன்றம்
3.மேல் நீதிமன்றம் 4.உயர் நீதிமன்றம்

**17.** பாதுகாப்புசபையின் நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு உள்ள விசேட உரிமை
1.நாடுகள் மீது படையெடுப்பு மேற்கொள்ளல்
2.ஐ.நா செயலாளரை பதவி நீக்குதல்
3.நாடுகளுக்கு உதவி வழங்குதல்
4.இரத்து அதிகாரத்தைப் பயன்படுத்துதல்

**18.** மக்களால் மக்களுக்காக நடைபெறும் மக்கள் ஆட்சி ஜனநாயகம் என்ற கருத்தினை முன்வைத்தவர்.
1. ரூசோ 2. லவல் 3. ஆப்ரகாம் லிங்கன் 4. சீலர்

**19.** பிரித்தானிய அரசும், பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனியும் இலங்கையில் கரையோரப்பகுதிகளை நிர்வகித்த காலப்பகுதி.
1.1802 - 1815 2.1796 - 1948
3.1815 - 1833 4.1798 -1802

**20.** பௌதீக வாழக்கைத்தரச் சுட்டி கணிப்பீடும்போது கருத்திற் கொள்ளப்படாதது.
1.கொள்வனவு சக்தி 2.பிறப்பின்போது எதிர்பார்க்கும் ஆயுட்காலம்
3.சிசு மரண வீதம் 4.எழுத்தறிவு வீதம்

**21.** இலங்கையின் கல்வி தொடர்பாக பின்வருவனவற்றில் ஏற்றுக்கொள்ள முடியாத அம்சம்
1.இலங்கையில் 86% மாணவர்கள் எழுத்தறிவு உடையவர்களாவர்.
2.இலவசக்கல்விக் கட்டளை 1945ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
3.14வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் அனைவரும் கட்டாயக் கல்வி பெறுகின்றனர்.
4.இலங்கைக் கல்விவிருத்திக்காக இன்று 3 அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**22.** இல்ங்கயில் ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்கள் நிறுவப்பட்டதன் நோக்கம் அல்லாதது.
1.வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்
2.வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து மூலதனத்தைப் பெறல்
3.சர்வதேச தொடர்புகளை மேம்படுத்துதல்
4.கைத்தொழில்களுக்கான தொழில்நுட்ப அறிவை ஏனைய நாடுகளுக்குப் பரவச் செய்தல்.

**23.** 1840ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரித்தானியரால் போக்குவரத்துப் பாதை அமைப்பது தொடர்பாக தேக்கநிலை ஏற்பட்டமைக்குக் காரணம்.
1.பிரித்தானிய ஆளுநர்களின் அதிகாரப் போட்டி.
2.கல், தார் போன்ற பொருட்களை பிரித்தானியாவிலிருந்து கொண்டு வருவதில் காணப்பட்ட தேக்கநிலை.
3.இராஜகாரிய முறை நீக்கப்பட்டதனாலும், கோப்பி வருமானம் குறைந்தமையாலும் பாதை அமைக்க நிதி ஒதுக்கமுடியாமை.
4.மேற்கூறிய அனைத்துக் காரணிகளும்

**24.** இலங்கையின் இனப்பிரிவினரில் ஒரு பகுதியாகவுள்ள இந்தியத் தமிழ்கள் இலங்கைக்கு கொண்டுவந்து குடியேற்றப்பட காரணமாக அமைந்த பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை.
1.கோப்பிப் பயிர்ச்செய்கை 2.தேயிலைப் பயிர்ச்செய்கை
3.இறப்பர் பயிர்ச்செய்கை 4.தெங்குப் பயிர்ச்செய்கை

**25.** தெல்கம விகாரையில் வைக்கப்படடிருந்த புனித தந்ததாதுவை மீண்டும் கண்டிக்கு எடுத்துச்சென்று தலதா மாளிகையைக் கட்டுவித்த மன்னன்.
1.2ம் இராஜசிங்கன் 2.1ம் விமலதர்மசூரியன்
3.2ம் விமலதர்ம சூரியன் 4.வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்

**26.** 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி நீதித்துறை சார்ந்த இரண்டு பெரிய ஸ்தாபனங்கள்.
1.மீயுர் நீதிமன்றம், உயர் நீதிமன்றம்
2.உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம்
3.மீயுர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம்
4.மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம்

**27.** அகதிகள் தொகையை மிக அதிகமாக அவதானிக்கக்கூடிய நாடுகளின் தொகுதி.
1.ஆப்கானிஸ்தான், இந்தியா, சோமாலியா, ரஷ்யா
2.ஆப்கானிஸ்தான், ருவாண்டா, சோமாலியா, அங்கோலா
3.அங்கோலா, ருவாண்டா, சோமாலியா, ரஷ்யா
4.ருவாண்டா, இந்தியா, சோமாலியா. அங்கோலா

**28.** இலங்கையில் நெல் ஆராய்ச்சி நிலையங்கள் காணப்படும் இடங்கள்,
1.பத்துல கொட, மகா இலுப்பல்லம, லுணுவில
2.பத்தலகொட, லுணுவில, அகலவத்தை
3.பத்தலகொட, மகாஇலுப்பல்லம, கன்னொருவை
4.மகா இலுப்பல்லம, கன்னொருவை, உடவளவை

**29.** இலங்கையில் பெண்களின் அந்தஸ்து உயர்வாக உள்ளமையை எடுத்துக்காட்டுவது.

(07ஆம் பக்கம் பார்க்க...)

# வலயக்கல்விப் பணிப்பாளர் நீண்டநேரம் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொள்ளச் சென்ற வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனை அப்பகுதியிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் சுமார் 45 நிமிடங்கள் வரையில் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

மேற்படி கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதற்காக வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையின் வாகனத்தில் சென்ற வேளை படையினர் அவரை உட்செல்ல விடாது தடுத்துள்ளனர்.

தொடர்ந்து இதுகுறித்து விசாரித்த பின் சுமார் 45 நிமிடங்களுக்குப் பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குச் செல்ல அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனால் அங்கு இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு காலதாமதமாகவே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நிமலராஜனின் நினைவுதினத்தை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

(திருநெல்வேலி)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 4ஆம் ஆண்டு நினைவு தினம நாளை யாழ்.குடாநாடெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இதனையொட்டி ஏழைச் சிறுவர்களுக்குச் சத்துணவு வழங்குவது உட்பட பல சமூக நலத்திட்டங்களை யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் மேற்கொள்ளவுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வம் தலைமையில் நினைவுதினக் கூட்டமொன்றும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள செய்யப்பட்டுள்ளன.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தவுள்ளனர். (ற-43)

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

1.பெண் ஜனாதிபதி ஐந்து மில்லியுன் வாக்குகள் பெற்றமை
2.விகாரமகாதேவி, சோமாவதி பட்டததுராணியாக இருந்தமை
3.பெண்களில் பெரும்பான்மையோர் உயர்கல்வி பெறுகின்றனர்
4.மேற்கூறிய அனைத்தும்.

**30.** பயங்கரவாத நடவடிக்கையாக அமையாதது,
1.தேசிய படைகளுடன் நேரடியாக தாக்குதலில் ஈடுபடல்
2.அரசியல் தலைவர்களைக் கொலை செய்தல்
3.கலந்துரையாடல் மூலம் உரிமைகளைப் பெற முயற்சி செய்தல்
4.வன்செயல்கள் மூலம் உரிமைகளைப் பெற முயற்சி செய்தல்

**A,B,C,D,E என்னும் எழுத்துக்களின் கீழே கருத்துச் சோடிகள் தரப்பட்டுள்ளன. இவறறை அவதானித்து 31 - 36 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**A** - 1.நவீன போக்குவரத்துத் துறை விருத்தி
2.சூழல் மாசடைதல்

**B** - 1.ஒரு வைத்தியருக்கான நோயாளியின் எண்ணிக்கை
2.ஆயுட்காலம்

**C** - 1.பிறப்புவீத அதிகரிப்பு
2.சனத்தொகை வளர்ச்சி

**D** - 1.கல்விக்கான உள்ளீடு
2.நாட்டின் கல்வித்தரம்

**E** - 1.கட்டுப்பாடற்ற இறக்குமதி
2.உளளூர் கைத்தொழில்

**31.** முதலாவது குறைவடையும்போது இரண்டாவது இணைந்து குறைவடைவது.
1.**B,C** 2.**C,D** 3.**C,E** 4.**B,D**

**32.** முதலாவது அதிகரித்துச் செல்லும்போது இரண்டாவது வீழ்ச்சி ஏற்படுவது.
1.**A,B** 2.**B,C** 3.**B,E** 4.**D,E**

**33.** முதலாவது காரணியைக் குறைப்பதன் மூலம் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தக்கூடிய சோடி.
1. **A** 2.**C** 3.**D** 4.**E**

**34.** முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவது காரணியையும் அதிகரித்து மனித குலத்திற்கு அச்சுறுத்தலாக அமைவது.
1. **A** 2.**B** 3.**D** 4.**E**

**35.** முதலாவது காரணியைக் குறைப்பதன் மூலம் வாழ்க்கை நலனை மேம்படுத்தக்கூடிய சோடி.
1.**A** 2.**B** 3.**C** 4.**E**

**36.** இரண்டாவது காரணியை அதிகரிப்பதற்கு முதலாவது காரணியையும் அதிகரிக்கவேண்டிய சோடி.
1.**A,B** 2.**B,C** 3.**C,D** 4.**D,E**

**37.** இலங்கையின் பண்டைய தொழில்நுட்பம் தொடர்பாக 'ஆலாஹன' அகழ்வு களில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்.
1.வர்ண ஓடுகள் 2.உரோம கிரேக்க நாணயங்கள்
3.கல் ஆயுதங்கள் 4.மருத்துவ உபகரணங்கள்

**38.** அரச உத்தரவாதமின்றி தனியார்துறைக்கு கடன் வசதி செய்யும் சர்வதேச ஸ்தாபனம்.
1.மக்கள் வங்கி 2.உலக வங்கி
3.சர்வதேச அபிவிருத்திச் சங்கம் 4. ஆசிய அபிவிருத்தி வங்கி

**39.** உயரம் குறைந்த பிரதேசத்தினை நோக்கி நீண்டு சாய்ந்திருக்கும் சம உயரக் கோடுகள் காட்டும் தரைத்தோற்றம்.
1.குழிவுச் சாய்வு 2.குவிவுச் சாய்வு
3.சுவடு 4.பள்ளத்தாக்கு

**40.** ஐக்கிய நாடுகள் தினம் கொண்டாடப்படும் திகதி
1.ஒக்ரோபர் 24 2.ஒப்ரோபர் 26
3.ஒக்ரோபர் 15 4.பெப்ரவரி 04

**க.பொ.த (சா/த) மாணவர்களே!**
**சமூகக்கல்வியும் வரலாறும் பகுதி -II வினாத்தாள் நாளை வெளிவரும்.**
**தொடர்ந்து பரீட்சை வினாத்தாள்களை உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்.**

# பல்கலைக்கழக மாணவ, ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு

## பெற்றுக் கொடுக்க கல்வி அமைச்சு முயற்சி

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத தெரிவிக்கப்படுகின்றது.

இதனை முன்னிட்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும், மாணவ மற்றும் ஊழிய சங்கங்களுக்கும் இடையில மாதாந்தம் கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன.

இக் கலந்துரையாடல்களின் மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என நகர அபிவிருத்தி அமைச்சரும் உயர் கல்வி பொது அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் அமைதிச் சூழலை ஏற்படுத்தி கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதே இதன் பிரதான நோக்கம் என்று குறிப்பிட்ட அவர் பல்கலைக்கழகங்களின் விடுதி வசதிகளை மேம்படுத்தவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (க-121)

## இடமாற்றம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகம் இன்று திங்கட்கிழமை முதல் சாவகச்சேரி டசசு வீதியில் உள்ள தென்மராட்சி கல்வி வலயத்திற்கு அருகில் ஒரு தனியார் கட்டடத்தில் இயங்கவுள்ளது.

இதுவரை காலமும் சாவகச்சேரி கண்டி வீதியில் ஒரு தனியார் கட்டடத்திலேயே இச்செயலகம் இயங்கிவந்தது.

அங்கு இடவசதி போதாமையால் இவ்வாறு இடம் மாறி இயங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கான நிரந்தர கட்டட வேலைகள் இனனும் பூர்த்தியாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற-127)

## கைக்குண்டு வீச்சில் இளைஞர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புதூர்ப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு புதூர்ப் பிரதேசத்தைச் சேர்ந்த கே. மகேஸ்வரன் (வயது-27)என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதோரால் இவரது வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்டதாகவும அதன்போதே அவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் வெள்ளைப் பிரம்பு தினம் பருத்தித்துறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் எஸ்.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழா, பருத்தித்துறை பிரதேச செயலர் வசந்தகுமா பிரதம விருந்தினராகவும்,லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் கே. தணிகாசலம சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-52)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய அறங்காவலர் சபையினால் யாழ்.மாவட்ட வீதியில் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டிகளின் முடிவு வெளியாகியுள்ளன.

இப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களினதும் பாடசாலையின் பெயரும் கீழ் தரப்பட்டுள்ளது.

**கீழ்ப் பிரிவு**

1ஆம் இடம்:- க.ஜெனித்தா- பருத்தித்துறை வடக்கு இந்து மகளிர் கல்லூரி

2 ஆம் இடம்:- த.தர்சிகா-வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலை

3 ஆம் இடம்:-. ரா.சர்ஜனா - வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி

**மத்திய பிரிவு**

1 ஆம் இடம்:- கோ.நந்தபாலன் - பருத்தித்துறை வடக்கு இந்து மகளிர் கல்லூரி

2 ஆம் இடம்:- சி.சபரிபிரியதர்சினி - யாழ்.சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

3 ஆம் இடம்:- வே.அபி[illegible]ா - வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி

**மேற்பிரிவு**

1 ஆம் இடம்:- ச.கேதீஸ்வரி -தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்

2 ஆம் இடம்:- பா.தர்மினி -பருத்தித்துறை வடக்கு இந்து மகளிர் கல்லூரி

3 ஆம் இடம்:- விஜிதா -தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்

**அதி மேற்பிரிவு**

1 ஆம் இடம்:-இ.சாயினி-பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி,

2ஆம் இடம்:-செ.மயூரிபாசுபா-பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி

3ஆம் இடம்:- சு.சசிகுமார்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (ப-35)

# ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் முரண்பாடுகள் வலுக்கின்றது!

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் உயர் மட்டக் கூட்டத்தில் தான் கலநது கொள்ளவில்லையென கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ஊடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள நெருககடி நிலையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டியுள்ளதாயினும் மாற்றுக கருத்துக்களை உடையவர்களுடன் வாதிடுவது தேரர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் செயலாகும் என கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிஹல உறுமயக் கட்சியுடன் தொடர்புடையவர்கள் ஜாதிக ஹெல உறுமயவில இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்பதே தனது விருப்பம் என்றும் அக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் கட்சியில் இருந்து விலக்கப்பட்டு கட்சியின் அதி உயர்பீடம் சங்க சபையிடம் கையளிக்கப்படும் வரை ஜாதிக ஹெல உறுமயவின் எந்தவொரு கலந்துரையாடலிலும் தான் பங்கேற்க முடியாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-121)

# வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி யாழ்.நகரில் பேரணி நடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகமும், யாழ்.விழிப்புணர்வு அற்றோர் சங்கமும், லியோர் கழகமும் இணைந்து வெள்ளைப் பிரம்பு விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நடத்தின. நேற்றுமுன்தினம் யாழ்.வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலையில் ஆரம்பமான இப் பேரணியில் யாழ். பார்வையற்றோர் சங்க உறுப்பினர்கள் பாடசாலை மாணவ,மாணவிகள் மற்றும் லயன்ஸ் கழக உறுபபினர்களும் கலந்துகொண்டனர்.

பேரணி ஆஸ்பத்திரி வீதி, [illegible] வீதி, மின்சார வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லிவீதி, மணிக்கூட்டுவீதி வழியாக யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தை நண்பகல் 12.00 மணிக்கு வந்தடைந்தது. அங்கு கூட்டமும் இடம்பெற்றது. (க-5)

## இன்று ஒரு தகவல்

# வணக்கம்

வணக்கம்! யாருக்கென்று பார்க்கின்றீர்களா? உங்களுக்குத் தான்! என்ன திடீரென்று இப்போது புதிதாக ஒரு வணக்கம்? இதுதானே உங்கள் சந்தேகம்? அந்த சந்தேகத்தை இப்போது தீர்த்து வைத்து விடுகிறேன்.

அது வேறுஒன்றுமில்லை. எனக்குத் தெரிந்த சிலவற்றை உங்களுக்கும் தெரியப்படுத்தலாம் என்று ஒரு நினைப்பு. மனிதன் கேட்பது அதிக மாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இரண்டு காதுகள்.பேசுவது குறைவாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒருவாய் இப்படி இருக்கும்போது நிலமை இப்படி இருக்கிறது. இந்த நிலையில் ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டுவாய்,ஒரு காது என்று இருந்தால் உலகம எப்படி இருக்கும்? கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள் அதன்பின் யாரும் தெருவில் நடமாடவே முடியாது.

அது இருக்கட்டும் இப்போது விஷயத்திற்கு வருவோம். இன்று எந்தத் தகவலை உங்களுக்குச் சொல்வது? ம்...சரி இந்த வணக்கம் ஏன்ற வார்த்தையையே எடுத்துக்கொள்வோம். நாம் ஒருவரை ஒருவர் பார்க்கும்போது "வணக்கம்" என்று சொல்லிக் கொள்வோம். "என்ன நலமாக இருக்கிறீர்களா?" என்று கேட்பது சிலரின் வழக்கம். இந்தப் பழக்கம் இடத்திற்கிடம் வித்தியாசப்படுகிறது.

வங்காளத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும் போது என்ன சொல்வார்கள் தெரியுமா? "ராம் ராம்" என்றுதான் சொல்லுவார்கள். சிலர் காலை வந்தனம் உங்கள் உடல் எப்படி?" என்பர். அதாவது **Good morning How do you do?** என்பார்கள். எகிப்து நாட்டில் ஒரு வேடிக்கை. அவர்கள் எப்படி ஒருவரையொருவர் விசாரிப்பார்கள் தெரியுமா? "நீங்கள் எவ்வளவு வியர்வை விடுகிறீர்கள்?" கொள்கலன் வைத்து அளந்தா சொல்லமுடியும்? இருந்தாலும் அவர்களது பழக்கம் அது.

சீனாக்காரர்கள் வேறுவிதம் "உங்களுடைய வயிறு எப்படி இருக்கிறது? சாப்பிட்டீர்களா?" இதுதான் அவர்கள் விசாரிக்கும் முறை. ரஷ்யாக்காரர்கள் கேட்பது எப்படி தெரியுமா? "நீங்கள் எப்படி உயிரோடு இருக்கிறீர்கள்? ஏதோ ஆச்சரியப்பட்டுக் கேட்பது மாதிரி இல்லையா?

பெர்ஷியர்கள் "உங்கள் நிழல் என்றும் குறையாமல் இருக்கவேண்டும்? என்று சொல்லிக் கொள்கிறார்கள் இது கொஞ்சம் பரவாயில்லை. ஜேர்மனிக்காரர்கள் "உங்களைப் பற்றி உங்களுக்கு என்ன தோன்றுகிறது?" என்று கேட்கிறார்கள். பிரெஞ்சுக்காரர்கள்"உங்களை எப்படித் தூக்கிக் கொண்டு செல்கிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். நம்மிடையே சிலரைப் பார்க்கும் போதும் இதேபோல விசாரிக்கலாம் போல் தோன்றும்.அவர்களைத் துணிச்சலாகவும் கேட்டு விடலாம்."உங்கள் உடம்பை எப்படி தூக்கிக் கொண்டு போகிறீர்கள்?" என்று அவர்கள் எம்மை விரட்டினால் நாம் ஓடிவந்து விடலாம். அவர்களால் துரத்திக் கொண்டு வந்து நம்மை பிடிக்க முடியாது. இப்படி ஒருவரை ஒருவர் நலம் விசாரிப்பதென்பது இடத்திற்கிடம் வித்தியாசப்படுகிறது.வார்த்தை மட்டுமில்லை. செய்கையும் அப்படித்தான். நாமிரண்டு கைகளையும் ஒன்று சேர்த்துக் கும்பிடுகிறோம். சிலபேர் ஒரு கையை நெற்றியில் வைத்துவிடுகிறார்கள். சுலபமாக சில இடங்களில் மூக்கைத் தொட்டால் வணக்கம் செலுத்துவதாக அர்த்தம். அதுசரி... என்ன ஒரு மாதிரியாக பார்ப்பது போலத் தெரிகிறதா. சரி முடித்து விடுகிறேன். ஆனால் அதற்கு முன் உங்களுக்கு மீண்டும் வணக்கம் கூறவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஆனால் சீனாக்காரர்களின் பாணியில் நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. "உங்கள் வயிறு எப்படி இருக்கிறது? சாப்பிட்டீர்களா?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமாதானப் பேச்சுக்களின் தாமதத்தினால் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஆபத்து

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவது மேலும் தாமதிக்கப்படுமானால் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஆபத்து நேரிடும எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கைக்கு விஜயம் செய்த பிரித்தானிய பாராளுமன்றக் குழுவும்,சுவிஸ் வெளியுறவு அமைச்சரும் போர் நிறுத்த உடன்படிக்கையின் எதிர்காலம் குறித்து தங்களது அச்சத்தையும், நம்பிக்கையீனத்தையும் வெளியிட்டுள்ளனர்.அதனை அரசாங்கம் கவனத்திற்கு எடுக்க வேண்டும் எனத் தாம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுகின்றமை தாமதிக்கப்படுவது தொடர்பாக கூட்டமைப்பின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினா செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராஜா ஆகியோர் ஊடகமொனறிற்கு அளித்த செவ்வியிலேயே குறிப்பிட்டுள்ளனர்.விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை இனிமேலும் தாமதிக்கமுடியாது. அவ்வாறு மேலும தாமதம் ஏற்படுமானால் அது விபரீத விளைவுகளையே ஏற்படுத்தும். போர்நிறுத்தம் பல சந்தர்ப்பங்களில் இராணுவத்தினரால் மீறப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அநாவசியமற்ற வன்முறைச் சம்பவங்களை இராணுவத்தினரே தூண்டிவிடுகின்றனர். ஆகவே தொடர்ந்தும் விடுதலைப்புலிகள் பொறுமையாக இருக்க முடியாது. சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காது பலவழிகளிலும் தமது இராணுவ மேலாதிக்கத்தை அரசாங்கம் செலுத்தி வருகிறது இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு ஆபத்து ஏற்படலாம் என கொழும்பிற்கு வருகை தந்துள்ள சுவிஸ் வெளியுறவு அமைச்சர் எச்சரிக்கை செய்திருக்கிறார். அவர் ஏன் அவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் என்பது குறித்து அரசாங்கம் கவனத்தில் எடுத்து ஆராய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். இதுதொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில் ,

யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு ஆபத்து ஏற்பட்டு வருகின்றது.

விடுதலைப்புலிகளும் தமிழ்மக்களும் பொறுமை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஏனெனில் அந்தள விற்கு இராணுவம் புலிகள் மீது நிழல் யுத்தத்தை கட்டவிழ்த்து விடுத்துள்ளது.

எனவே ஜனாதிபதியும் அரசாங்கமும் நிலைமையை உணர்ந்து உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேணடும்.அத்துடன், இராணுவத்தின் யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கைகளையும் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் இல்லையேல் விபரீத விளைவுகளை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் எனவும் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தையை தாமதப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எக்காரணததையும் கூறமுடியாது. விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவித்துள்ள நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதே.

ஜனாதிபதி அமைத்த தேசிய ஆலோசனை சபை பயனற்றது. வேண்டுமானால் தங்களிடையே ஏற்பட்டுள்ள அரசியல் ரீதியான முரண்பாடுகளைத் தீர்க்க அந்தப் பேரவையைப் பயன்படுத்தட்டும்.இரு தசாப்தகால தமிழர் பிரச்சினைக்கு நோர்வேயின் அனுசரணையுடன் உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்காதுவிட்டால் போர்நிறுத்த உடன்படிக்கை கேள்விக்குறியாகிவிடும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராஜா தெரிவித்தார். (ற-121)

## இராசி பலன்

**18.10.2004**
**(ஐப்பசி 02, திங்கட்கிழமை)**
**கேட்டை மு.இ 9.35 மணிவரை**
**பஞ்சமி ந.இ. 12.01மணிவரை**
**இராகுகாலம் 7.32- 9.02 மணிவரை**
**சுபநேரம் 12.02-1.32 மணிவரை**
**சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | காரிய தாமதம், உறவினர் வெறுப்பு, பிரயாண பயம், வேலைப்பழு. |
| இடபம் | முயற்சி கைகூடும், குடும்பசுகம், நல்லவரவேற்பு, நண்பர் சந்திப்பு. |
| மிதுனம் | பகைவர் நேசம், உற்சாகம், காரிய சித்தி, தேக நலன். |
| கடகம் | சகோதரர் உதவி, உடல்நலக் குறைவு, வியாபாரசிந்தை, புதிய திருப்பம். |
| சிங்கம் | மனச்சஞ்சலம், காரிய தாமதம், அதிக வார்த்தை, உறவினர் சந்திப்பு. |
| கன்னி | பெருமை, தொழில் வருமானம், பிரயாணம், தடைப்பட்டகாரியம் கைகூடும். |
| துலாம் | தனவிரயம், காரிய தாமதம், கடின உழைப்பு, உடல் நலக்குறைவு. |
| விருச்சிகம் | நண்பர் சந்திப்பு, நல்ல செய்தி, தொழில் நன்மை, பெரியோர் உதவி. |
| தனுசு | காரிய அலைச்சல், சுப செலவு, அபகீர்த்தி, உறவினர் சந்திப்பு. |
| மகரம் | தொழில் வருமானம், காரிய நன்மை, மன மகிழ்ச்சி, குடும்ப நலம். |
| கும்பம் | நண்பர் உதவி, மேன்மையடைதல் தொழில் முன்னேற்றம், காரியம் கைகூடும். |
| மீனம் | இடமாற்றம், கட்டுப்பாடு, தொழில் மந்தம், மனச்சஞ்சலம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

கடந்த காலங்களில் நிறைவேற்ற முடியாது போன

## வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகவே மக்கள் கூட்டமைப்பிற்கு வாக்களித்தார்கள்

# ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்ற முடியாமல் போன வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகவே மக்கள் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு வாக்களித்ததாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



கண்டி கில்ஸ் வேன்ட் கல்லூரியில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற வைபவம் ஒன்றிலேயே ஜனாதிபதி இந்தக் கருத்தினை முன்வைத்தார்.

நாம் எதிர்பார்த்த அனைத்தையும் முன்பு ஆட்சி செய்தபோது நிறைவேற்ற முடியாமல் போனது.ஏழு ஆண்டுகள் என்பது சிறிய காலப்பகுதியாகும்.அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற இக்காலப் பகுதி போதாததாகும்.

புதய அரசாங்கம் பதவிக்கு வந்து குறுகிய காலமே ஆகின்றது.ஆறு மாதங்களுக்கு முன்னர் நாட்டு மக்கள் மீண்டும் எமக்கு அதிகாரத்தை வழங்கினார்கள்.

எமது அதிகாரக் காலப்பகுதிக்குள் வாக்குறுதிகளை நிறைவேற்ற மிக நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் மக்களுக்கு நாங்கள் வழங்கிய வாக்குறுதிகள்ள நிறைவேற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

# இராணுவ அதிகாரி கொலைசெய்த மனித எச்சங்கள் மன்னாரில் மீட்பு

(மன்னார்)

வாகனக் கடத்தல் சம்பவங்களின் சூத்திரதாரியான இராணுவ அதிகாரியினால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட வாகன சாரதியின் மனித எச்சங்கள் உயிலங்குளத்தில் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாதோட்டம் இராணுவ முகாமில் பணியாற்றும் மேஜர் அனுருத்த சம்மிக்கவின் உத்தியோகபூர்வ அறையிலிருந்து இவற்றை விசேட பொலிஸ் குழுவினர் கண்டெடுத்துள்ளனர். கடந்த புதன்கிழமை இவரும் இராணுவ கோப்ரலான எம்.ஜே. குமாரதிலக்கவும் கடத்தப்பட்ட வாகனமொன்றுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். விசாரணையின் போது இவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலையடுத்து குறிபபிட்ட உத்தியோக பூர்வ அறை சோதனையிடப்பட்டது. சோதனையின் போது பல வாகனங்களின் ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டன. மேலும், உயிலங்குளம் பகுதியில் அனுராதபுரத்தில் இவரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட வாகன சாரதியொருவரின் மனித எச்சங்களும் பொலிஸாரால் தோண்டியெடுக்கப்பட்டு பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விசாரணையின் போது குறிப்பிட்ட சாரதியை வெட்டி படுகொலை செய்து எரித்து, பின்னர் புதைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அந் நேரம் இவர் உயிலங்குளம் இராணுவமுகாமில் பணியாற்றினார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. (ற)

# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடாத்தும் நவராத்திரி விழா இன்று உரும்பிராய் காளி கோயிலில் மாலை 7.00 மணிக்கும் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு சுதுமலை அம்பாள் ஆலயத்திலும் நடைபெறவுள்ளது. (க)

# மஹாராஷ்டிராவில் மீண்டும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி
# 288 தொகுதிகளில் 141 இடங்களைக் கைப்பற்றியுள்ளது

(சென்னை)

மஹாராஷ்டிராவில் மீண்டும் காங்கிரஸ் கூட்டணியின் ஆட்சி அமைக்கப்படுகிறது.

288உறுப்பின[illegible]ண்ட மஹாராஷ்டிர மாநில சட்டசபை தேர்தல் கடந்த 13ஆம் திகதி நடைபெற்றது. இதில் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், குடியரசுக் கட்சி ஆகியவை கூட்டணி அமைத்து போட்டியிட்டன. சிவசேனையும், பா.ஜ.வும் மற்றொரு கூட்டணியாக களத்தில இறங்கின. மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியும், முலாயம் சிங்கின் சமாஜவாடி கட்சியும் தனித்துப் போட்டியிட்டன.

காங்கிரஸ் கூட்டணியில் காங்கிரஸ் 157இடங்களிலும், தேசியவாத காங்கிரஸ் 124 இடங்களிலும், குடியரசுக் கட்சி 7 இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியது. சிவசேனை கூட்டணியில் சிவசேனை 163 இடங்களிலும் பா.ஜ. 111இடங்களிலும் போட்டியிட்டது. பகுஜன சமாஜ் 272 இடங்களிலும் சமாஜ்வாடி 95 இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியது.

நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி, மொத்தம் உள்ள 288 தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி 141 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. அந்தக் கூட்டணியில் காங்கிரசுக்கு 69 இடங்களும், தேசியவாத காங்கிரசுக்கு 71 இடங்களும், குடியரசு கட்சிக்கு 1 இடமும் கிடைத்துள்ளன.

அறுதிப் பெரும்பான்மைக்கு 145 இடங்களில் வெற்றி பெறவேண்டும். காங்கிரஸ் கூட்டணி பெற்றுள்ள 141 இடங்கள் என்பது அறுதிப்பெரும்பான்மைக்கு 4 இடங்கள் குறைவு ஆகும். சுயேட்சைகள் 19 இடங்களில் வெற்றிபெற்றுள்ளன. இவர்களில் பெரும்பாலானவர்கள் காங்கிரஸ், தேசியவாத காங்கிரசில் டிக்கெட் கிடைக்காமல் போட்டி வேடபாளர்களாக நின்றவர்கள். இவர்கள் மீண்டும் காங்கிரஸ், தேசியவாத காங்கிரசில் சேரத தயாராக உள்ளனர்.

எனவே இவர்களது ஆதரவுடன் காங்கிரஸ் கூட்டணி மீண்டும் மராட்டியத்தில் ஆட்சி அமைக்கிறது. மக்களவை தேர்தல தோல்விக்கு பிறகு பா.ஜ.வுக்கு மராட்டிய சடடசபை தேர்தல் வாழ்வா, சாவா போராட்டமாக இருந்தது. அங்கு சிவசேனையுடன் கூட்டணி சேர்நது எப்படியும் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்ற கனவில் மிதந்தது.

ஆனால் அந்தக் கனவு கலைந்துவிட்டது. சிவசேனை - பா.ஜ. கூட்டணிக்கு 117 இடங்கள்தான் கிடைத்துள்ளன. சிவசேனை 62 இடங்களிலும், பா.ஜ 54 இடங்களிலும் வெற்றிபெற்று இருக்கின்றன. மார்க்சிய கம்யூனிஸ்டு 3 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளது. சுயேட்சைகள் 14 இடங்களில் வெற்றிபெற்று உள்ளனர்.

காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் கூட்டணியின் சட்டமன்றத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவர் கவர்னரைச் சந்தித்து ஆட்சி அமைக்க அழைக்கும்படி கோருவார். கவர்னர் அழைப்பு விடுத்ததும் மந்திரிகள் பட்டியலைக் கொடுத்து ஆட்சி அமைப்பார். தற்போது மஹாராஷ்டிரத்தில் காங்கிரஸ்-தேசியவாத காங்கிரஸ் கூட்டணியின் காபந்து ஆட்சிதான உள்ளது. முதல்வராக காங்கிரசை சேர்ந்த சுசில் குமார் ஹிண்டே இருக்கிறார். அவர் மீண்டும் முதல்வராவாரா அல்லது அவருக்குப் பதில் காங்கிரசைச் சேர்ந்த வேறு ஒருவர் முதல்வராகத் தேர்ந்து எடுக்கப்படுவாரா என்பது விரைவில் தெரிந்துவிடும்.

கடந்த சட்டசபை தேர்தலில் தேசியவாத காங்கிரசைவிட காங்கிரஸ் அதிக இடங்களில் வெற்றி பெற்றதால் முதல்வர் பதவி காங்கிரசுக்குத் தரப்பட்டது. இந்தத் தேர்தலில் காங்கிரசைவிட தேசியவாத காங்கிரஸ் 2 இடங்களில் கூடுதலாக வெற்றி பெற்றுள்ளது. அதனால் முதல்வர் பதவி எந்த கட்சிக்கு என்ற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது. (ற)



## விபத்துக்குள்ளான சரக்கு விமானம்

(கனடா)

கனடாவில் சரக்குகளை ஏற்றிச் சென்ற **"BRITISH CARGO-747"** என்ற விமானம் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 7 பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

கனடாவிலுள்ள ஹலி.ஃ.பக்ஸ் விமான நிலையத்தில் இருந்து நேற்றுக் காலை எரிபொருளை நிரப்பிக்கொண்டு புறப்பட்ட இவ்விமானத்தின் வால்பகுதி தரையில் மோதியதாலேயே இவ்விமானம் வெடித்தது.

ஸ்பெயின் நாட்டுக்கு உணவுப் பொருட்கள் உள்ளிட்ட ஏனைய சில பொருட்களை இவ்விமானம் ஏற்றிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ற)




## சோயூஸ் விண்கலம் இலக்கை அடைந்தது

(மொஸ்கோ)

ரஷ்சியாவின் சோயூஸ் விண்கலம் 3 விண்வெளி வீரர்களுடன் சர்வதேச விண்வெளி ஆராய்சசி நிலையத்தை நேற்று முன்தினம் சென்றடைந்துள்ளது.

அமெரிக்கா,ரஷ்யா, அவுஸ்திரேலியா, ஜப்பன், உள்ளிட்ட பல நாடுகள் ஒன்றிணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்தை அமைத்து வருகின்றன.

இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் அமெரிக்க மற்றும் ரஷ்சிய விண்வெளி வீரர்கள் பல மாதகாலம் தங்கியிருந்து ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர். இந்த வீரர்களுக்குத் தேவையான பிராணவாயு, உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அமெரிக்க மற்றும் ரஷ்ய விண்கலங்கள் விண்ணுக்குச் சென்று விநியோகித்து வருகின்றன.

கடந்த ஆண்டு அமெரிக்காவின் கொலம்பியா விண்கலம் வெடித்துச்சிதறி, கல்பனா சால்வா உள்ளிட்ட 7விண்வெளி வீரர்கள் பலியாயினர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து விண்ணுக்கு விண்கலம் அனுப்புவதை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது. இதன் கரணமாக ரஷ்யாவின் சோயூஸ் விண்கலம் சர்வதேச விண் ஆராயச்சி நிலையத்துக்குச் சென்று வருகிறது.

கடந்த 14ஆம் திகதி கஜகிஸ்தானிலுள்ள பைகானூர் ஏவுதளத்திலிருந்து சோயூஸ் வண்கலம் மூலம் 2 ரஷ்ய வீரர்களும், ஒரு அமெரிக்கரும் வீண்ணுக்குச் சென்றனர். கொலம்பியா விண்கல விபத்துக்குப் பிறகு 4ஆவது முறையாக சோயூஸ் விண்ணுக்குச் சென்றுள்ளது. விண்ணில் சோயூஸ் செலுத்தப்பட்டு 49வது மணி நேரத்தில் நேற்று முன்தினம் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை சென்றடைந்தமை குறிப்பிடத்தககது. (ற)

# அதிபர் தேர்தலில் புஷ் வெற்றிபெற்றால் வியட்நாமின் நிலைக்கு நாடு தள்ளப்படும்

## ஜோன் கெரி பிரசாரம்



(வோஷிங்டன்)

அதிபர் ஜோர்ஜ் புஷ் பதவிக் காலத்தில் ஒரு அமெரிக்கருக்குக் கூட வேலை வாய்ப்பை உருவாக்கவில்லை. சாதாரண அமரிக்கர் குடும்பத்தைப் பற்றி அவருக்குத் தெரியவில்லையா அல்லது கவலைப் படவில்லையா என்பது புதிராக உள்ளது என்று ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரி விளாசித் தள்ளினார்.

அமெரிக்க அதிபர் தேர்தல். அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ் மீண்டும் போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சி சார்பில் அவரை எதிர்த்து ஜோன் கெரி களத்தில் இருக்கிறார். பிரசாரம் உச்சக்கட்டத்தில் நடக்கிறது.


இதுவரை இருவரும் மூன்றுமுறை நேருக்கு நேர் சந்தித்து விவாதித்து இருக்கின்றனர். ஜனநாயகக் கட்சிக்கு செல்வாக்கு நிறைந்த விஸ்கான்சின் மாநிலத்தில் நேற்று முன்தினம் ஜோன் கெரி பஸ் பயணம் மேற்கொண்டு தீவிர பிரசாரம் செய்தார்.

மில்வாக்கி என்ற இடத்தில் நடந்த பேரணியில் அவர் பேசுகையில், அமெரிக்க முன்னேற்றம் பற்றி அதிபர் புஷ்ஷிற்கு எந்தச் சிந்தனையுமில்லை. அதை மாற்றிக் கொள்ளவும் அவர் விரும்பவில்லை. அவரது அரைகுறை நிர்வாகத்தால் அமெரிக்கப் பொருளாதாரம் நலிவடைந்து வருகிறது. கடந்த 72 ஆண்டுகால குடியரசுக் கட்சி அதிபர்கள் வரலாற்றில் ஒரு அமெரிக்கருக்குக் கூட வேலைவாய்ப்பை உருவாக்காதவர் அதிபர் ஜோர்ஜ் புஷ்தான்.

சாதாரண அமெரிக்க குடும்பம் பற்றி அவருக்குத் தெரியவில்லையா அல்லது கவலைப்படவில்லையா என்பது புரியவில்லை. அவர் மீண்டும் வெற்றிபெற்றால் அமெரிக்காவில் வேலைவாய்ப்பு, சுகாதாரம், பாதுகாப்பு, வருமானம் இருக்காது. அரசு பற்றாக்குறை உயரும். இதற்காக அவர் வெட்கப்படுவதைவிட்டு பெருமைப்பட்டால் அவரை நான் வெறுக்கிறேன். அமெரிக்க வேலைவாய்ப்புகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாவதை அதிபர் புஷ் தடுக்கத் தவறிவிட்டார்.

சாதாரண அமெரிக்கர்களின் உழைப்பீல் உருவான பணத்தில் பெரும் பணக்காரர்களுக்கும், பெரிய கம்பனிகளுக்கும் வரிச்சலுகைகளை வாரி வழங்குகிறார்.

ஈராக்கில் அவரது அணுகுமுறை தவறாக முடிந்திருக்கிறது. மீண்டும் அவர் வெற்றிபெற்றால் வியட்நாம் போரில் நடந்தது போல இராணுவச் செலவு அதிகரிக்கும் எனத் தெரிவித்தார். (ற)



இந்தோனேசியாவின் பாலியில் நடைபெற்ற குண்டுவெடிப்புகளில் இறந்தவர்கள் நினைவாக அவுஸ்திரேலியாவின் சிட்னியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தின் முன் சம்பவம் நடந்த இரண்டு ஆண்டுகள் நினைவாகப் பறக்கவிடப்பட்ட புறாக்கள்.

## ஆப்கானில் குண்டுவெடிப்பு நால்வர் பலி; மூவர் படுகாயம்

(ஆப்கானிஸ்தான்)

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில், தலிபான் தீவிரவாதிகள் நிலத்தில் புதைத்துவைத்த வெடிகுண்டை ரிமோட் மூலம் வெடிக்கச் செய்ததில் மூன்று சிறுவர்கள் மற்றும் ஒரு பொலிஸ்காரரர் என நான்கு பேர் உயிரிழந்தனர்.

புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்காக கடந்த 9ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் தேர்தல் நடந்தது. அதன் வாக்கெண்ணும் பணிகள் இடம்பெற்று வரும் இந்நிலையில், குனார் பிராந்தியத்தில் உள்ள அஸ்மார் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க இராணுவத்தினருக்குப் பொருட்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறிக்குத் தீ வைக்கப் பட்டது.

இதன் பின்னணியில் தலிபான் தீவிரவாதிகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்த லொறியை வேடிக்கை பார்க்கச் சென்றபோது நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்து மூன்று சிறுவர்கள் மற்றும் ஒரு பொலிஸ் காரரா பலியாயினர். மேலும் 3 சிறுவர்கள் படுகாயமடைந்தனர். இந்த வெடிகுண்டை தலிபான் தீவிரவாதிகள் ரிமோட் மூலம் இயக்கி வெடிக்கச் செய்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். (ற)



இந்திய விமானப்படைப் பிரிவின் சூரியக்கிரன் குழுவினர் மும்பையில் சாகச ஒத்திகைகளை நிகழ்த்தினர். அதில் எரியும் நெருப்பைத் தாண்டி குதித்துவரும் படை வீரர்கள்.

# நல்லூர்க் கோட்ட மட்ட சைவ நெறிப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**தரம் - 7**

தி.தமயந்தி – கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தி., இ.சோபிகா - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, வி.சதுர்ஷன்-கொக்குவில் இந்துக் கல்லூரி.

**தரம் - 8**

ஜெ. ஜெனோதா - யாழ். இந்து மகளிர் கல்லூரி, இ.சுவேந்தா – செங்குந்தா இந்துக் கல்லூரி, சி.மருஜன்- யாழ்.இந்துக் கல்லூரி.

**தரம் - 9**

சி. கயேந்தினி - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, ச.ஜனனி - கொக்குவில் இந்துக் கல்லூரி, இ.கோகுலவாசன் - யாழ்.இந்துக் கல்லூரி.

**தரம் - 10**

கி. டல்ஷினி - கொக்குவில் இந்துக் கல்லூரி, பு.ரசிதா- செங்குந்தா இந்துக் கல்லூரி,ம.பிரதீபன்-யாழ்.இந்துக் கல்லூரி.

**தரம் - 11**

த.திவாகரன் -யாழ்.இந்துக் கல்லூரி,செ.ரெனீசியா-யாழ்.இந்து மகளிர் கல்லூரி, க.சயாணி-கொக்குவில் இந்துக் கல்லூரி.

**தரம் - 12**

ப.சாதுரியா-கொக்குவில் இந்துக் கல்லூரி, சி.அஞ்சனா-யாழ். இந்து மகளிர் கல்லூரி,ந.நிரோஜினி–பெரியபுலம் மகா வித்தி.

**கோலம் போடுதல்**

**தரம் - 6**

கருண்ராஜ் - செங்குந்தா இந்துக் கல்லூரி, ச.ஆத்தி - கொக்குவில் இந்துக் கல்லூரி,பா.சிந்துஜன்-யாழ்.இந்துக் கல்லூரி.

**தரம் - 7**

ந.யதுாஸ்யன்-யாழ்.இந்துக் கல்லூரி,ப.கீர்த்தனா- யாழ்.இந்து மகளிர் கல்லூரி, தி.காயத்திரி -கொக்குவில் இராமகிருஷ்ண வித்தி.

**தரம் - 8**

க.முகுந்தன்-யாழ்.இந்துக்கல்லூரி, மு.மனோஜ்பிரியா-கனகரட்ணம் ம.ம.வித்தி.,ச.சிந்துயா- கலட்டி மெ.மி.வித்தி.

**தரம் - 9**

வி.கிஷாந்தன்- முத்துத்தம்பி மகா வித்தியாலயம்,கு.டினோஜா-கோண்டாவில் இந்து மகா வித்தி., சு.யமுனாநிதி -கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.

**தரம் - 10**

செ.மாதுரன்-கொக்குவில் இந்துக் கல்லூரி,ஆர்.ரஜீந்திரன்-கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தி., ப.வர்ணகுலா-நல்லூர் இ.த.பெ. பாடசாலை.

**தரம் - 11**

பூ. ரோகினி - யாழ்.இந்து மகளிர் கல்லூரி,கி.ஜனகன்-கொக்குவில் இந்துக் கல்லூரி, ர.சாகித்தியா -கோண்டாவில் இந்து மகா வித்தி.

**தரம் - 12**

சி.சஞ்சீபன்- கோண்டாவில் இந்து மகா வித்தி., இ. விஜயநிதி - கொக்குவில் இந்துக் கல்லூரி, ப. கஜதீபன்-பெரியபுலம் மகா வித்தி.

**தரம் - 13**

ப.றோகினி-கொக்குவில் இந்துக் கல்லூரி, ஜெ. கௌரிதேவி- யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**சமய அறிவுப் போட்டி**

**தரம் 13**

பா. மோகன கிருஷ்ணன்-யாழ். இந்துக் கல்லூரி,சி.உதயதாரணி -கொக்குவில் இந்துக் கல்லூரி.

(ந-5)


## அன்பு மாணவர்களே!

# நவராத்திரி பூசை

## நடைபெற்று வருவதையொட்டி

# 'கவிதை மாலை'

பகுதியை வலம்புரி தொடர்ந்தும் வெளியிடுகின்றது. மாணவர்களாகிய உங்களின் கவிதையும் இடம்பெறவேண்டுமாயின் நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை,கறகும் தரம், மாணவர் பெயர் ஆகிய விபரங்களுடன்

**"வலம்புரி"**

**இல.15, வெள்ளாந்தெரு,**

**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

*குறிப்பு:* கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம். (ஆ-ர்)



# விவாத அரங்கு - 6

**விடயம்**

**மதமாற்றத் தடைச் சட்டம்**

**தேவையானதா?**

**தேவையற்றதா?**

**நடுவர் : விதுரன்**

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்**

*அனுப்பவேண்டிய முகவரி*

**விவாத அரங்கு**

**வலம்புரி**

**இல.15, வெள்ளாந்தெரு,**

**யாழ்ப்பாணம்.**


# செய்தித் துளிகள்

## கருத்தரங்கு

(பருத்தித்துறை)

லயன்ஸ் சேவை தினத்தையொட்டி வடமராட்சி லயன்ஸ்கழகத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறைப் பொலிஸார் "வீதிப் பாதுகாப்பு விதிகளும் விபத்துக்களைத் தடுத்தலும்" பற்றிய கருத்தரங்கொன்றை வட இந்து மகளிர் கல்லூரியில் நடத்தினர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொறுப்பதிகாரி எஸ். ராஜபக்ச கருத்துரைகளை வழங்கினார். இக்கருத்தரங்கு வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் எம். தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கல்லூரி மைதானத்தில் பொலிஸ் குழுவினர் வீதிப் பாதுகாப்பு பற்றிய செய்முறை விளக்கம் செய்து காணபிக்கப்பட்டது. பெருந்தொகையான பாடசாலை மாணவ, மாணவிகள், ஆசிரியைகள் இதில் கலந்துகொண்டனர். (ந-52)

## சிறுவர் முதியோர் தின விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகம் வடமராட்சி லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்திய சிறுவர், முதியோர் தின விழா அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகவும் வடமராட்சி லயன்ஸ் கழக தலைவர் எம்.தர்மலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ந-52)

## மின் இணைப்பு

(புங்குடுதீவு)

ஈழத்து இராமேஸ்வரம் என அழைக்கப்படும் புங்குடுதீவு பாணாவிடை தேவஸ்தானத்திற்கு 7ஆம் வட்டாரம் புங்குடுதீவைச் சேர்ந்த நமசிவாயம் காராளபிள்ளை என்பவரினால் மின் இணைப்பு சாதனம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. அதற்கான மின் இணைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ந-126)

## புகையிலை நாற்று மேடைகள் அமைப்பு

(இணுவில்)

வலிகாமம் தெற்கு, வலிகாமம் கிழக்குப் பகுதிகளில் புகையிலை நாற்றுமேடைகள் அமைக்கும் பணியில் இம்முறையும் இப்பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளனா.

சென்ற வருடம் சில விவசாயிகளின நாற்றுமேடைகள் மழையினால் எரிவு நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டு பலர் நஷடமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-122)

## கடற்றொழிலாளர்களுக்கு உபகரணங்கள்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத்தின் மூலம் சுழற்சி முறைகடனை யு.எஸ்.டி.பி. நிறுவனமும் நிக்கொட் நிறுவனமும் இணைந்து வழங்கி வருகின்றன.

அண்மையில் உடுத்துறை கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்கு சுழற்சி முறைக்கடன் அடிப்படையில் வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (ந-35)

## மீன்பிடி வலைகள் அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

கியூடெக் நிறுவனத்தினால் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் தம்பாட்டிக் கிராமத்தில் இருபத்தைந்து பேருக்கு அண்மையில் மீன்பிடிவலைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொருவருக்கும் இருபதாயிரம் ரூபா பெறுமதியான வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஊாகாவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகன் இநநிகழ்வில் கலந்துகொண்டுபயனாளிகளுக்கு வலைகளை வமங்கினார். (ந-75)

## பொதுஅறிவுப் போட்டி

(சாவகச்சேரி)

ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலயமும் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து பாடசாலை மட்டத்தில் நடாத்தும் தரம் 10,11ற்கான பொதுஅறிவுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதற்கு தென்மராட்சி கல்வி வலயததிற்குட்பட்ட தரம் 10,11ல் கற்கும் மாணவர்கள் தத்தமது பாடசாலைகள் மூலம் விண்ணபிக்கும்படி வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ந-127)

## நூலக வாரம்

(கோப்பாய்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை நூலக வாரத்தை கொண்டாடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாசிப்புத்திறனை மாணவரிடையே விருத்தியடையச் செய்தல்,நூலக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல் ஆகிய அம்சங்களை முன்வைத்தே இவ்வாரம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-79)

## நிர்வாகசபைக் கூட்டம்

(இணுவில்)

கமநல சேவைக் குழுவினது இம்மாத நிர்வாகசபைக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை 9.30 மணிக்கு குழுத்தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சீடாத்திட்டம், நியாப்திட்டம், கமக்காரர் ஓய்வூதியத் திட்டம,விவசாய அமைப்புக்களின் செயற்பாடு, பயிர்ச் செய்கை முன்னேற்றம், விவசாய சம்மேளனங்களின் செயற்பாடுகள், உள்ளீடுகள், இருப்புத் தேவை போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்படவிருப்பதாக நிலைய பெரும்பாக உத்தியோகத்தா சு.சோதிநாதன் தெரிவித்துள்ளார். (க-122)

## பரீட்சை

(சுதுமலை)

சுகாதார போஷாக்கு நலன்புரி அமைச்சின் கீழ் கடமைபுரியும் பொதுச் சுகாதார பரிசோதகரின் தரம்II "B"ல் கடமை புரிபவர்களுக்கான செய்முறையும் வாய்மூலமான பரீட்சையும் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் களுத்துறையில் உள்ள தேசிய விஞ்ஞான கற்கை நிறுவனத்தில ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான நேரசூசிகள்,அனுமதி அட்டைகள் என்பன சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கான எழுத்து மூலப பரீட்சைகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-252)

## கருத்துரைகள்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலிய பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலைய இயக்குநர் சார்ள்ஸ் ஹொக் இன்று பி.ப. 2.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் தியானம் செய்வது எப்படி? அகச் சந்தோஷம், சுய அமைதி என்ற பொருளிலும் பி.ப.5.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் "வெற்றிக்கான ஒரு பாதை" என்ற பொருளிலும் உரையாற்றவுள்ளார். (க)

## மண்டபம்அமைப்பு

(இணுவில்)

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயிலின் தெற்குப்புற வீதியில் உள்ள காணியில் ஆலயத்தின் உறுப்பினர்கள் மற்றும் இணுவிலைச் சேர்ந்த வெளியூர் பொதுமக்களின் பங்களிப்புடன் பல இலட்சம் ரூபாய் செலவில் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. (ந-122)

## பஸ்குடைசாய்ந்தது பெண் ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி வந்தாறுமூலையில் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் பஸ் குடைசாய்ந்ததில் 50 வயதுடைய குடும்பப் பெண்ணொருவர் பலியானர் மேலும் பெண் உட்பட 5பேர் காயமடைந்துள்ளனர்.

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற போககுவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்வண்டியொன்றே இந்த விபத்திற்கு உள்ளானது. வேகமாக வந்த பஸ்வண்டி பாதையை விட்டு விலகி கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள காணியொன்றிற்குள் குடைசாய்ந்தது.

பஸ்வண்டியில் 40இற்கும் மேற்பட்ட பணிகள் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. பலியானவர் வாழைச்சேனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை லக்சுமி என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ந-121)

## அறநெறி வகுப்பு

(இணுவில்)

ஏழாலை மத்தி கண்ணகியம்மன கோயில் நிர்வாக சபையினரால் பாலர் வகுப்பு மாணவர்களுககென ஆலய மண்டபத்தில் அறநெறி வகுப்பு ஒன்று நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த வகுப்பில் சுமார் 45க்கு மேற்பட்ட மாணவர்கள பயனடைகின்றனர். (ந-122)

## மரத்தில் இருந்து விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

வரணிப் பகுதியைச் சேர்ந்த பூ.இரத்தினசிங்கம் என்பவர் மரத்திலிருந்து தவறி விழுந்து மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் கடந்த செவ்வாயக கிழமை மாலை இடம்பெற்றது. விசாரணைக்காக இவரது சடலம் கொடிகாமம் பொலிஸாரால் மந்திகை ஆதார வைத்தியசாலையில ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு மேற்கொண்டார். (ந-47)

## கட்டாக்காலிகள் தொல்லை

சாவகச்சேரி நகர் பொதுச் சந்தையில் கட்டாக்காலி ஆடு, மாடு என்பன பெரும் எண்ணிக்கையில் நடமாடுவதால் வியாபாரத்திற்கு பெரும் இடையூறாக இருக்கின்றன.

இதுகுறித்து செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இவ்வாறு கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடு, மாடு என்பன நகரசபையினரால் பிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும என சாவகச்சேரி நகர சபைச் செயலர் தெரிவித்துள்ளார். (ந-127)

## ஐரோ. நாடுகளின் வைத்திய நிபுணர்கள் குழு இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளின் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று நேற்றுமுன்தினம் இலங்கை வந்தடைந்தது.

பிரதமர் மஹிந்தராஜபக்ஷவின் அழைப்பின் பேரிலேயே இக் குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சத்திரசிகிச்சை நிபுணர்கள் குழு முதலில் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு சென்று அங்கு இலவச பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வார்கள் எனவும கூறப்படுகின்றது. (க-61)



## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

கோப்பாய் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் வீதிகளில் போக்குவரத்துச் செய்வதில் பலவித சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதால் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ந-79)

முறைபடச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர். - குறள்

வலம்புரி

# பலாலி விமான ஓடுபாதை விஸ்தரிப்புக்கு இந்தியா மற்றும் அமெரிக்காவின் உதவியா?

## ஊடகச் செய்திகளுக்கு வான்படைத் தளபதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானநிலைய ஓடுபாதையை தந்திரோபாய அடிப்படையில் பாரிய அளவில் விஸ்தரிப்பதற்கு இந்தியா மற்றும் அமெரிக்கா அரசுகளின் உதவிகள் பெறப்படவுள்ளதாக வெளிவந்த ஊடகத் தகவல்களை வான்படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா நிராகரித்துள்ளார்.

சர்வதேச செய்தி ஸ்தாபனம் ஒன்றிற்கு செவ்வியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இதுகுறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வான்படைத் தளத்துடன் கூடிய சிவில் வானூர்தித் தளத்தின் விரிவாக்கத்திற்கு இந்தியாவின் உதவி பெறுவது குறித்து இந்திய நாடுகளின் இணக்கப்பாட்டுக்காக இலங்கை காத்திருக்கின்றது.

இதுகுறித்து இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை இம்மாத பிற்பகுதியில் கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் புதுடில்லி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் பலாலி வான் ஊர்தித் தளத்தின் ஓடுபாதையைத் திருத்த வேண்டிய அவசியப் பணிக்காக இந்தியா அல்லது அமெரிக்காவின் உதவியைப் பெற அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக இலங்கை அரசு தரப்புச் செய்திகளில் குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில் நாம் வானூர்தித் தளத்தின் சில திருத்த வேலைகளை மட்டுமே மேற்கொள்ளவுள்ளோம். எனினும் இதற்காகப் பாரிய வேலைகள் எதனையும் மேற்கொள்ள நாம் தீர்மானிக்கவில்லையெனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான உதவிகளுக்கு மட்டுமே இந்தியா உதவி வழங்கவுள்ளதாகத் தெரிவித்த அவர்,அமெரிக்கா இதற்கான உதவி எதையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ரு-121)

# அரசு முன்வைக்கும் மாற்று யோசனைகளை பேச்சுவார்த்தை மேசையில் கலந்தாலோசிக்கலாம்

## விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இடைக்கால நிர்வாகசபை குறித்து ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் முன்வைக்கப்படக்கூடிய எந்தவொரு மாற்று யோசனை குறித்தும், பேச்சுவார்த்தை மேசையில் கலந்தாலோசிக்கலாம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் சில ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பாக விளக்கமளிக்கும் போதே அவர் ஐ.பி.சி தமிழ் சேவைக்கு இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் இணங்கினால், அந்தப் பேச்சுவார்த்தையின் போது, இத்தகைய மாற்று யோசனைகளைப் புலிகள் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை ஏற்கனவே வெளியிட்டிருப்பதுடன், தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்ததாகவும் தயா மாஸ்டர் நினைவுபடுத்தினார். (ரு-121)

# சிக்கல்களை உருவாக்கும் சீர்குலைந்த நிர்வாகம்

இனயுத்தம் மீண்டும் ஒரு தடவை வெடிக்குமா? என்ற கேள்வி மக்கள் மனங்களை விட்டு மெல்ல நகரத் தொடங்கிவிட்டது.

இதற்கு அரசாங்கமும் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையும், மக்கள் மனங்களில் ஏற்பட்ட வைராக்கியமும், வக்கிரமும் காரணமாக அமையலாம்.

எதுவாயினும் இப்போது நாட்டில் யுத்தம் நடைபெறாவிடினும், நடந்த யுத்தத்தால் ஏற்பட்ட விளைவுகளை மனித சமூகம் அனுபவித்துக்கொண்டு இருக்கின்றது. எங்கும் ஊழல், பொது நிர்வாகம் முழுமையாகச் சீர்குலைந்துபோய் நாடே நடுத்தெருவில் என்பதாக கதைநீள்கிறது.

பொருள்கள், சேவைகளின் விலை நாளுக்கு நாள், நேரத்துக்குநேரம் அதிகரித்துச் செல்கிறது. இதனால் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் ஏகப்பட்ட துன்பங்களை அனுபவிக்கின்றனர். குறிப்பாக பல குடும்பங்களில் ஒருநேர உணவிற்கு வழியின்றி வாடும் சிறுவர்களின் நிலைமை பெரும் துன்பத்துக்குரியது.

இவை தவிர, மறுபுறத்தில் வீதி விபத்துக்கள், திருட்டுக்கள், இலஞ்ச ஊழல்கள், மோசடிகள், பண்பாட்டுப் பிறழ்வுகள் என்ற பட்டியல் நீள்கிறது.

இவை யாவற்றிற்கும் அப்பால் மக்களை ஒழுங்குபடுத்தி அறக்கருத்துக்களை புகட்ட வேண்டிய சமய குருமார் "மதம் தலைக்கேறி அகந்தைகொண்டு அரசியலில் புகுந்துவிட்டனர்" அரசியல்வாதிகளுக்கு எல்லாம் நல்லவற்றை எடுத்துக்கூறி மக்களின் வாழ்வியல் செம்மைக்கு உதவவேண்டிய பௌத்த பிக்குகள், தம்மை மறந்து பாராளுமன்றப் பதவிகளில் ஆசைகொண்டு விட்டனர்.

இதிலிருந்து இலங்கை நாடு எங்கே செல்கின்றதென்ற உண்மையைப் புரிந்துகொள்ள முடியும். ஒரு நாட்டின் அழிவு என்பது அரசாட்சியின் ஊடாகவும், சமயவாதத்தின் ஊடாகவுமே எழுகின்றது. அவ்வகையில் இலங்கையில் மேற்கூறப்பட்ட இரண்டு விடயமுமே அழிவுக்கான பாதையில் முன்னேற்றம் கண்டு செல்கின்றன.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற உறுதிமொழியுடன் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு சமாதானத்திற்கான சூழ்நிலையை குழப்பியடித்து மீண்டும் மனித அழிவுக்கு வகைசெய்கின்றது.

உலக நாடுகளில் ஒரு உரையும், உள்நாட்டில் இன்னொன்றுமாக அறிக்கைகளை விடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நன்மதிப்பைக் காப்பாற்றிக்கொள்வதில் கண்ணும்கருத்துமாக இருக்கின்றார்.

கடந்த இருபது ஆண்டுகளாக நாட்டில் நடந்த யுத்தத்தால் மனிதஇனம் பட்ட அவலங்கள், அதன் நீட்சிபற்றி எதுவுமே அக்கறைகொள்ளாத ஒரு அரசாங்கத்தால் - ஜனாதிபதியால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பது நம்பத்தகுந்ததல்ல.

ஆக, சிங்களதேசம் - பௌத்த நாடென்ற குறுகிய வட்டத்திற்குள் நின்று மனித அவலத்தை ஏற்படுத்திய இனவாத ஆட்சியாளர்களால் நாடு குட்டிச்சுவராகிப் போயுள்ளது. நாட்டின் நிர்வாகமும் சீர்குலைந்து எங்கும், எதிலும் சிக்கல் என்ற நிலைமை புரையோடிப் போயுள்ளது.

# கூட்டுறவு முறைமையைக் கட்டியெழுப்ப அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நிலவும் போட்டித்தன்மைகள் மிகுந்த வர்த்தகத்துறையை வெற்றிகொள்வதற்கும் கூட்டுறவு முறை



மையைக் கட்டியெழுப்பவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலியதகக் கூட்டுறவுச் சங்கத்தினால நிர்மாணிக்கப்பட்ட 5 வீடுகளை உரியவர்களிடம் ஒப்படைக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் போர் அனர்த்தங்களினால் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டிருந்த போது அவர்களுக்கு உதவுவதற்கு கூட்டுறவுச் சங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது.

எவ்வாறாயினும் கடந்த 1977ஆம் ஆண்டிலிருந்து திறந்த பொருளாதாரம் இந்நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இதன மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் படிப்படியாகச் செல்வாக்கை இழந்தன. கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குப் பொருட்களை விநியோகிப்பதை விட சமூகமேம்பாட்டில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரு-121)

# வாகனக்கடத்தலில் ஈடுபட்ட இரு படையினர் பொலிஸாரிடம் சிக்கினர்

(மன்னார்)

மன்னார் படைமுகாமில் கடமையாற்றும் இராணுவ உயர்அதிகாரியும் சாதாரண சிப்பாய் ஒருவரும் வாகனங்களை பலவற்றை கடத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கண்டி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ மேஜர் டபிள்யூ.எம்.ஜி.அனுரத்த சம்மிக்க மற்றும் கோப்ரல் எ.ஜி.குமாரதிலக் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பொலிஸார் இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது 15க்கும் மேற்பட்ட வாகனங்களை கடத்திச் சென்ற சம்பவத்துடனும், அனுராதபுரம் பகுதியில் வாகனச் சாரதியொருவர் கொலை செய்யப்பட்டு குறித்த வாகனம் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களென்று தெரியவருகிறது.

அத்துடன் இவர்களது இல்லங்களை பொலிஸார் சோதனை செய்த போது அங்கிருந்த இரண்டரை அடி நீளமான கத்திகள மற்றும் கைக்குண்டுகள், வாகன இலக்கத்தகடுகள் என்பவறறைக் கைப்பற்றியுள்ளனர். (க-8)

# நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா பரிஸில் சட்டநிபுணர்களுடன் சந்திப்பு

(பரிஸ்)

தமிழீழ நீதி நிர்வாகத்துறைப்பொறுப்பாளர் பரா புலம் பெயர் சட்டவாளர்கள் மற்றும் சட்டநிபுணர்களுடன் பரிஸில் கலந்துரையாடியுள்ளார்.

தமிழீழத் தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து லண்டனில் நீண்டகாலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் சட்டவாளர்கள், நிபுணர்கள் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பராவுடன் கலந்துரையாடல்களை நடாத்தினர்.

தமிழழத்தில் சட்டரீதியாகவும் ஏனைய வழிகளிலும் சகல ஒத்துழைப்புக்களையும் தருவதாக அவர்கள் இச்சந்திப்பில் உறுதியளித்தார்கள்.

தமிழீழத் தாயகத்தில் சட்டஒழுங்கு சிறப்பாகப் பேணப்படுவதைச் சுட்டிக்காட்டி அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-121)

# உலகில் 850 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடுகின்றனராம்

## விவசாய அமைச்சர் சுட்டிக்காட்டுகிறார்

(கொழும்பு)

உலகில் சுமார் 850 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடுவதாக விவசாயக் கால்நடைகள் அமைச்சர் அனுரகுமார திஸ்ஸநாயக்க சுட்டிக்காட்டுகிறார்.

உலக உணவு தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், எனவே,நாங்கள் நீண்டகால நோக்கங்களை குறிக்கோளாகக் கொண்டு செயற்திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும. செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படுமானால் அது மக்களின் நன்மையை முன்னிறுத்தி அமைதல் வேண்டும்.

தற்போதைய நிலையில் விவசாயச் சூழல் கட்டமைப்பு நீண்டகாலமாக பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இலங்கையில் மாத்திரமன்றி முழு உலகிலும் உணவுப் பாதுகாப்பு ஆபத்தை எதிர்நோக்குகின்றது.


முழு நாட்டு அறிக்கைகளின்படி 850 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். இந்நிலை இலங்கையில் தோன்றாதிருக்க வேண்டுமானால் நீண்டகாலத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (121)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

புலன்களைத் தடுத்து நிறுத்துங்கள். அப்பொழுதும் மனம் சுழன்று கொண்டு தான் இருக்கிறது. நான் நன்றாகததான் இருககிறேன் என்று நினைத்துக்கொண்டு. இப்போது இறைவனைத் தியானம் செய்ய ஆரம்பிக்கின்றேன். அடுத்த நிமிடமே என் மனம் லண்டனுக்குத் தாவுகிறது. அங்கிருந்து இழுத்தால் அது நான் நியூயோர்க்கில் முன்பு செய்த காரியங்களை நினைத்துப் பார்ப்பதற்காக அங்கு செல்கிறது. தியானத்தினால் தான் இந்த அலைகளை நிறுத்த வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்



நேற்று கொக்குவில் குளப்பிட்டியில் விபத்துக்குள்ளான கன்ரர் வாகனத்தையும், அதனுள் நசியுண்ட நிலையில் காணப்படும் சைக்கிளையும் படத்தில் காணலாம். படம்: ஐங்கரன்

# புலிகளின் தன்னாட்சி அதிகார சபையை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கவில்லை!

## திலக் கருணாரட்ண தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை குறித்து கட்சிக்குள் தான் கருத்துக்களைக் கூறுவேனே தவிர பகிரங்கமாக அதனை விமர்சிக்கவில்லை.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்துள்ள ஹெல உறுமயவின் தலைவரான திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

பண்டாரகம தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திலக் கருணாரட்ண நேற்று அக்கட்சியின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்

ஜே.வி.பியைக் கூட்டணியாகக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலும் பார்க்க ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தெளிவான அரசியல் நோக்கு இருக்கிறது. இதனால்தான் அக்கட்சியில் இணைந்து செயற்படத் தீர்மானித்தேன்.

ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என்று கூறுகின்றதே தவிர அதனை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை என அவர் தெரிவித்தார்.

ஒஸ்லோ பிரகடனத்தையும் விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக யோசனையையும், பேச்சுவார்த்தையும் ஆரம்பிப்பதற்காக ஒன்றோடொன்று தொடர்புபடுத்த முடியாது எனவும் அவர் பதிலளித்தார். (ம-121)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(கல்வியங்காடு)

கிணற்றுக்குள் இருந்து குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காடு புதிய செம்மணி வீதி வேளாதோப்பு அம்மன் கோயிலடியிலுள்ள வீட்டுக் கிணற்றிலிருந்தே நேற்று முன்தினம் இரவு இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி பாலசௌந்தரி (வயது 55) என்பவரே மரணமானவராவார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-74)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் வீதியில் சென்ற சிறுமிகள் காயம்

(அல்வாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வீதியால் சென்ற இரு சிறுமிகள் உட்பட மூவர் காயமடைந்தனர்.

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றோடொன்று மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின்போது கரவெட்டி பரமானந்தா ஆச்சிரமத்தைச் சேர்ந்த ரி.பிரமிளா (வயது 14), இ.தயானி (வயது 15) மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்ற பு.சுரேஸ் (வயது 30) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இரு சிறுமிகளையும் மந்திகை மருத்துவமனையில் அனுமதித்தபோது மருத்துவ தாதியினர் உடனடியாக சிகிச்சை வழங்கமறுத்தனர். இதனையடுத்து தாதியருக்கும், காயமடைந்த சிறுமிகளைக் கொண்டுசென்றவர்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டபோதும் மருத்துவரின் தலையீட்டால் பின்னர் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. (ச-150,41)

## நாடு பிளவுபடு...

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காண்பதற்கு நாம் முயற்சிக்கும் முன் நாம் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைப்பெறவேண்டும்.

நாட்டைப் பொருளாதாரத்துறையில் முன்னேற்றுவதற்கு நிலையான பொருளாதாரக் கொள்கை ஒன்று அவசியம் வகுக்கப்படவேண்டும். இந்தப் பொருளாதாரக் கொள்கைக்கு மக்களின் அங்கீகாரம் அவசியம் பெறப்படவேண்டுமென்று ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்திக் கூறினார். (ம)

## குளப்பிட்டி...

பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்றவுடன் வாகனச் சாரதி உட்பட மூவர் அருகிலிருந்த இராணுவ முகாமிற்குள் தஞ்சம்புகுந்தனர்.

இதனையடுத்து அங்கு நின்ற மக்களுக்கும், இராணுவத்தினருக்கு மிடையே முறுகல்நிலை ஏற்பட்டது. எனினும், பொலிஸார் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதேவேளை, காயமடைந்த இருவரையும் வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு செல்வதற்கு எவரும் முன்வராததால் சில மணிநேரம் தாமதித்தே அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ச-19,130)

## அரசின் மாற்று யோசனை...

கையளிப்பதற்கு அரசாங்கம் ஒஸ்லோவுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், ஜனாதிபதி செயலக உயரதிகாரி ஒருவர் மிகவும் இரகசியமான முறையில் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் இம்மாதம் 11 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட தேசிய ஆலோசனை சபையில் ஜனாதிபதியினால் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள விடயங்களும் ஏற்கனவே ஒஸ்லோவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தேசிய ஆலோசனை சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் அரசின் மாற்று யோசனைகளை வன்னியில் விடுதலைப் புலிகள்வசம் ஒப்படைப்பதற்கு ஜோன் பீற்றர்சன் தலைமையிலான உயர்மட்டக்குழு கொழும்பு வரவிருப்பதாக நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## புலிகளின் யோசனைகளின்...

நிலைப்பாட்டை ஏற்கனவே தெரிவித்துள்ளோம். இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில்தான் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்ற மக்கள் ஆணையைப் பெற்றுள்ளோம்.

எம்மால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை சர்வதேச சட்ட வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு, தலைமைப் பீடத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில்தான் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டுமென்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சரிடமும் தெரிவித்துள்ளோம்.

ஆனால் அரசிடமிருந்து வெளிவரும் செய்திகள் எமக்கு அதிர்ச்சியைத் தருபவையாக உள்ளன. அரசு தயாரித்து வைத்துள்ள மாற்றுயோசனைகளை விடுதலைப் புலிகள் நிச்சயம் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தை இதுவரை அரசாங்கத்தின் எந்தப் பிரதிநிதியும் சந்திக்கவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாக அரசு மேற்கொள்ளவில்லை. இந்நிலையில் அரசு குழப்பநிலையையும், தடுமாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடிய செய்திகளையும் பரப்பி வருகிறது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் தமிழ்மக்களால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையிலேயே பேச்சுக்களை முன்னெடுக்க விடுதலைப் புலிகள் தயாராக உள்ளார்கள் என்று சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (ம)

## ஜனாதிபதியின்....

கிளிநொச்சி சென்ற ஜனாதிபதியின் ஆலோசகர் ஹரீம் பீரிஸ் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்ததாக இணையத் தளங்கள் தகவல் வெளியிட்டதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கடற்கரும்புலி....

மையும், தலைவரின் வழிகாட்டலுமே காரணமாகும் எனத் தெரிவித்தார்.

நேற்றைய அறிமுக நிகழ்வு யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அருள்மாஸ்டர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை யாழ். மாவட்ட துணைப் அரசியற்துறை பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரினை மாவீரர் ரோமின் தந்தையார் கணபதிப்பிள்ளை ஏற்றிவைத்தார். 'அலைபாடும்பரணி' ஒலிநாடாவினை செம்மணன் வெளியிட்டு வைக்க, மாவீரர் ரோமின் தந்தையார் கணபதிப் பிள்ளை பெற்றுக்கொண்டார். (ச-121)


SRI LANKA RED CROSS SOCIETY

VACANCIES

School based Health and Psychosocial Program for Children in Jaffna District

1.PROJECT COORDINATOR

1.1 Qualifications :-

He/She should have a Degree Sociology or in the relevant field

and/or

Diploma in Social work with working experience in the relevant field

or

10 years working experience in the relevant field.
Fluency in written and spoken English and Computer Literacy is essential.
Age below 55 years

2.ACCOUNTANT - 02 Positions

2.1 Qualifications:-

He/She should be party qualified in either CIMA or Chartered Accountancy or AAT stage III with full membership.

or

Higher National Diploma in Accountancy (HNDA) from a recognized Institution.

or

10 years working experience as an Accountant in a Public/ Private or NGO sector organization.
Relevant working experience preferred
Competency in Accountancy software will be an added qualification.
Computer Literacy and English knowledge is essential.
Age Below 55 years.
Job Specification are available at the following office.
Send in your applications on or before 25th of october 2004 with complete CV along with copies of relevant certificates to

Branch Executive Officer,
Sri Lanka Red Cross Society,
Jaffna District Branch,
No.73, Kandy Road, Jaffna

Only short listed candidates will be called for an interview

(C-638)



அன்பு வாசகர்களே

உங்கள் நன்மை – நலன்கருதி

வாரமலர்

சங்குநாதம்

உங்கள் வலம்புரியுடன் இணைக்கப்படுகின்றது

சங்குநாதத்தில் வெளிவரும் ஆக்கங்களை தினந்தோறும் வலம்புரியில் வாசிக்கத் தவறாதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், போட்டிமுடிவுகளை

வலம்புரி -சங்குநாதம்

இல15, வெள்ளாந்தெரு

யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்பத் தவறாதீர்கள்.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.